

# ஞானச்சுடர்

ஆனி மலர்

2009



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

உ

# குறள்வழி



**அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்ற[து] அறம்.**

பொருள்: தருமம் எனப்படுவது பொறாமை, ஆசை, கோபம், கொடுஞ்சொல் முதலியவற்றை நீக்கி நடப்பதேயாகும். (35)

**அன்றறிவாம் என்னா[து] அறஞ்செய்க மற்றது**
**பொன்றுங்கால் பொன்றாத் துணை.**

பொருள்: பின்பு பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிடாது அவ்வப்போதே தருமத்தைச் செய்யவேண்டும். அவ்வாறு செய்யப்பட்ட தருமம் இறக்கும்போது அழிவில்லாத துணையாகக் கூடவரும். (36)

# நற்சிந்தனை



## மறப்பேனோ குருநாதன் தன்னை

### நமச்சிவாய மாலை

சிவநெறிச் செல்வர்தங்கள் சிந்தையே கோயில்கொண்ட
உவமையில் லாதவொன்றே உமைபங்கா நமச்சிவாய 1

தேகம்நீ யல்லவென்ற திடமெனக் கருளிப்பொல்லா
மோகத்தை முனிந்தாட்கொண்ட முதல்வனே நமச்சிவாய 2

தத்துவந் தொண்ணூற்றாறுஞ் சடமெனக் காட்டி யென்னைத்
தத்துவா தீதனாக்குந் தாணுவே நமச்சிவாய 3

புலன்வழிச் செல்லும்பொல்லாப் புந்தியை நீக்கியாண்ட
விமலனே விண்ணோர்போற்றும் வித்தகா நமச்சிவாய 4

ஆதார மாறுந்தாண்டி யப்பாலே சென்றபேர்க்குப்
பாதார விந்தமீந்த பரமனே நமச்சிவாய 5

சூதான வெளியிலென்னைச் சுகம்பெற நிறுத்திவைத்த
வேதனே விண்ணோர்போற்றும் வேந்தனே நமச்சிவாய 6

தேடிநான் காணும்வண்ணந் திருக்கோலங் காட்டி யென்னைக்
கூடியே யடிமைகொண்ட கொற்றவா நமச்சிவாய 7

நாடியோ ரிரண்டினாலும் நடந்திடும் வாசிதன்னை
நீடிய சுழுமுனைக்குள் நிறுவினாய் நமச்சிவாய 8

காலைநீ தூக்கியாடுங் காட்சியைக் கண்டபேர்கள்
வேலைசூழ் நிலத்தில்வந்து வீழ்வரோ நமச்சிவாய 9

காயமே கோயிலாகக் கண்டிடும் மாந்தருக்குத்
தாயகம் நீயேயன்றோ சங்கார நமச்சிவாய 10

# ஞானச்சுடர்



வெளியீடு :

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் -138

## 2009 ஆனி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ஆலய வழிபாட்டில்.... | இரா. கேதீசன் | 1 - 2 |
| 'ராம' பிரம்மம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 3 - 5 |
| சித்த சுத்தி | சு. இலங்கநாயகம் | 6 - 7 |
| வைகாசிப் பெருவிழா | | 8 - 9 |
| தவமுனிவனின் தமிழ்..... | சிவ மகாலிங்கம் | 10 - 14 |
| ஆசாரக்கோவை | | 15 - 16 |
| வேண்டுதல்கள் | திருமதி சி. யோகேஸ்வரி | 17 - 19 |
| பணி | S.S. றஜீந்திரன் | 20 - 23 |
| நித்திய அன்னப்பணி | | 24 - 25 |
| திருவிளையாடற் புராண.... | ஆறுமுகநாவலர் | 26 - 27 |
| காவடி ஆட்ட.... | நீர்வை மணி | 28 - 29 |
| கொன்றைவேந்தன் | ஔவையார் | - 30 |
| தொண்டைமானாறு நிலம்... | திருமதி சி. அருட்செல்வி | 31 - 32 |
| ஆசை | வாரியார் சுவாமிகள் | 33 - 34 |
| வட இந்திய ஸ்தல... | | 35 - 37 |
| அருட்கவி சீ. விநாசித்தம்பி... | செல்வி தி. வரதவாணி | 38 - 39 |
| செய்திச் சிதறல் | | - 40 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 41 - 45 |
| தமிழகத் திருக்கோயில்.... | வல்வையூர் அப்பாண்ணா | 46 - 48 |


அன்பளிப்பு:-

மலர் ஒன்று 30/= ரூபா

வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்:- 021- 2263406, 060- 2219599

FAX: 021- 2263406

பதிவு இல. Q.D/38/NEWS/2009

அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.

உ

# ஞானச்சுடர்

# வைகாசிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:**

ஞானச்சுடர் வைகாசிமாத மலருக்கான வெளியீட்டுரையினை ஆச்சிரமத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவரும் கிராம சேவையாளருமாகிய திரு சி. சிவபாலசிங்கம் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது உரையில் தொண்டைமானாற்றங்கரையில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் வேலவனின் திருவருளினால் ஞானச்சுடர் மலரானது தொடர்ந்தும் வெளிவருவதோடு, சைவ சமயத்தவர்களுடைய ஆன்மீக சிந்தனைகளை மேம்படுத்துவதையே நோக்காகக் கொண்டு வெளிவருகிறது.

முருகப்பெருமானின் அருளோடு வெளிவரும் 137ஆவது மலரை நான் வெளியிட்டு வைப்பதில் பெருமையடைகிறேன். தொடர்ந்தும் மலர் வெளிவர முருகனின் அருளாசி வேண்டி தனது வெளியீட்டுரையை நிறைவு செய்தார்கள்.

**மதிப்பீட்டுரை:**

ஞானச்சுடர் 137ஆவது மலருக்கான மதிப்பீட்டுரையினை ஆச்சிரமத்தின் பணிகளோடு நெருங்கிய தொடர்புகள் உள்ளவரும் இளைப்பாறிய அதிபரும் சமாதான நீதவானுமாகிய திரு க. ஆனந்தராசா (அன்னதாசன்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் மதிப்பீட்டுரையில் கூறுகையில் முருகப்பெருமானின் திருவருளும் ஆச்சிரமத்து சுவாமிகளின் குருவருளும் கூடியிருக்கும் இவ்வேளையில் மதிப்பிடமுடியாத பெருமைகள் அடங்கிய இம்மலரை நான் மதிப்பீடு செய்வதென்பது முடியாத காரியமே. இருந்தும் மலருக்கு மதிப்பீடு செய்வது என்பது எனக்குக் கிடைத்த மிகப்பெரும் பாக்கியமே என விதந்து பெருமையுடன் கூறினார்.

இம்மலர் ஆரம்பித்த காலத்திலேயே மலருக்குப் பொருத்தமான பெயரைச்சூட்டி ஆன்மீகக் கருத்துக்களை மட்டுமே பரப்பி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் மலரில் இடம்பெற்ற ஆன்மீகச் சிந்தனைகள் பொதிந்த கட்டுரைகள், சுடர் தரும் தகவல், கவிதைகள், பொன்மொழிகள், சிறுசெய்திகள் போன்றவற்றை சபையில் கூடியிருந்த அடியார்கள் விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் சிறுசிறு கதைகள்மூலம் விளக்கிக் கூறி தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்கள்.

# சுடர் தரும் தகவல்

கடவுளால் இப்பிரபஞ்சத்திலே படைக்கப்பட்ட ஆறறிவு படைத்த ஜீவராசிகள் அனைவரும் மனிதர்கள்தானா? மனிதராகப் பிறந்த நாம் உண்மையில் மனிதனாகி விடமுடியாது. நாம் ஒவ்வொருவரும் நாளாந்தம் உண்பது, உறங்குவது, உலகியற் சந்தோஷங்களில் மூழ்கித் திளைப்பது முதலிய பழக்க வழக்கங்களையே கைக்கொள்கின்றோம். இப்பழக்க வழக்கங்களையே ஐந்தறிவு படைத்த விலங்குகளும் மேற்கொள்கின்றன.

இவ்வுலகில் அரிய மானிடப் பிறவியை எடுத்த நாம் விலங்குகளைவிட எவ்வகையில் மேலானவர்களாக இருக்கின்றோம்? நாம் ஒவ்வொருவரும் நான் யார்? என் உள்ளம் யார்? எங்கிருந்து வந்தேன்? எதற்காக வந்தேன்? இந்த உடம்பு தானே வந்ததா? என்ற கேள்விகளுக்கான பதிலைத் தேடிக் கற்றுக்கொள்ள முயல வேண்டும்.

தற்கால உலகில் மனிதனாகப் பிறந்த அனைவரும் பொன்னையும் பொருளையும் நிலபுல சொத்துக்களையும் பதவிகளையும் நினைத்து நினைத்து உள்ளம் வெதும்பி அகத்தினிலே ஆசைகளைச் சேர்த்து மனத்தைப் புண்ணாக்கி வீணாக மடிந்து விடுகிறோம். நாம் எம்மை மனிதத்தன்மை உள்ளவர்களாக மாற்றவேண்டும், மனிதராக மாறவேண்டும். நாளடைவில் இடையறாத இறைசிந்தனையை வளர்க்கவேண்டும். இறைசிந்தனையுடன் எமது கடமைகளைச் சரிவரச் செய்வோமானால் இறைவன் எமது உள்ளத்தைக் கோயிலாகக் கொண்டு உறைவான். அத்துடன் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் முதலிய அழுக்குக்களை நீக்கி மனிதராக வாழவேண்டும். அவ்வாறான மனிதன் உலகத்தில் உள்ள அனைவராலும் உயர்ந்த மனிதனாகப் போற்றப்பட்டு மதிக்கப்படுவான் என்பது திண்ணம்.

இக்காலகட்டத்தில் இன்றைய மனிதர்கள் மத்தியில் இறைசிந்தனை என்பது மிகமிக அருகி வருகின்றதை நாம் உணரக்கூடியதாக இருக்கின்றது. ஆகவே இவ்வுலகில் சிந்திக்கும் ஆற்றல்களுடன் கூடிய ஆறறிவு படைத்த, மனிதராகப் பிறந்த எல்லோரும் இறை சிந்தனைகளுடன் நல்ல பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டு எமக்கான கடமைகளைச் சரிவரச்செய்து உண்மையான மனிதராக வாழப்பழகிக்கொள்ளுதல் நன்று.

---

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.**

காசுக்கட்டளை
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
T.P.No. 021- 2263406
060 - 2219599

காசோலை
செ. மோகனதாஸ்
க. இல. 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

www. sannithiyan. org

உ

# நல்லறிவைத் தா சந்நிதிப் பெருமானே!

ஆற்றங்கரை ஒருபாலாய் அலைகடலே ஒருபால
அரியவிமானக் கோயிலில் வைகி - வணங்கும்
அடியார்கள் குறைதீர வடிவேலை ஏந்தி ஏந்தி
ஆறுமுகா ஓடி நீ வா

மாற்றமான இந்தக் காலம்
வாழுமக்கள் உன்னை நம்ப
வாழ்வதை நீ அறிந்திருந்தும் - நீயே
வரும் வழியே விழிவைத்து
வாழும் எங்கள் இடமே நீ
மாமயிலில் வரலாகாதோ!

சாற்றுமிந்த நாட்களிலே
சாமிநாதா உனையன்றி
சார்ந்துவாழ ஒருவழி காட்டாய்
சண்முகனே சந்நிதியில்
புண்ணியனே என்ன செய்வோம்
சஞ்சலங்கள் தீர்க்க வாராயோ

சாமி, குரக் கனைவிட்டோம்
சார்ந்து வள்ளி மரவள்ளியை
சற்று மெண் ணாமல் விட்டிட் டோமே,
தக்க பசு மாட்டை விட்டோம்
சரிக்கட்டி காசு சேர்த்து
தப்பாமல் மா, பாண் வாங்கிறோம்

எங்கள் கையே எமக்குத் துணை
எமது பிழை யறிந்து விட்டோம்
இந்த அறிவை எமக்குத் தந்தாயே - முருகா
இனிய எங்கள் சிவ குமரா
எமக்குத் துணை நீ யையா
இன்றறிந்தோம் சந்நிதியானே.

“இலமென் றசைஇ யிருப்பாரை நோக்கி
நிலமென்னும் நல்லாள் நகும்”

திருக்குறள்.

*முதுபெரும் புலவர், கலாபூஷணம்*
*வை.க. சிற்றம்பலவனார் அவர்கள்.*

உ

# ஆனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**திரு ஜீவமனோகரன் சுந்தரலிங்கம்**
(சுவிஸ்லாந்து)

**திரு A. முகுந்தன்**
(வெள்ளவத்தை, கொழும்பு)

**திரு செ. தேவேந்திரநாதன்**
(கணபதி வெதுப்பகம், உரும்பராய்)

**திரு பொ. வியாகேஸ்**
(நிர்வாகி, பீக்கன் கல்வி நிறுவனம், உடுப்பிட்டி)

**திரு ம. ஸ்ரீகாந்தன்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

**திரு கந்தையா ஏகாம்பரம்**
(புறூடிலேன், அரியாலை)

**திரு த. ஜெகரெத்தினம்**
(விஜிதா ரெக்ஸ், யாழ்ப்பாணம்)

**திரு தம்பையா புவனேந்திரன்**
(வங்கி ஊழியர், யாழ்ப்பாணம்)

**திரு சி. நடேசமூர்த்தி J.P**
(வங்கி ஊழியர், அச்சுவேலி)

**திரு சி. கதிரவேலு**
(தொண்டைமானாறு)

**திரு ஐ. சிவநாதன்**
(மருதம், நெல்லியடி)

**செல்வி S. ஐடா**
(புலோலி தெற்கு, புலோலி)

**திரு அ. கணேசமூர்த்தி**
(உரும்பராய் வடக்கு, உரும்பராய்)

**திரு வ.சி. கணபதிப்பிள்ளை**
(ஆவரங்கால், புத்தூர்)

**உரிமையாளர்**
(குகன் ஸ்ரோர்ஸ், ஊரெழு மேற்கு)

**திருமதி செ. தவமணி**
(சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)

**உரிமையாளர்**
(புதிய நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)

**தலைவர் / செயலாளர்**
(அளவெட்டி ப.நோ.கூ. சங்கம், ஊழியர் தொழிற்சங்கம்)
**உரிமையாளர்**
(அம்பிகா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)
**திரு கு. சோதிராசா**
(தொல்புரம் மேற்கு, சுழிபுரம்)
**உரிமையாளர்**
(பேபி போட்டோ, கந்தர்மடம்)
**திரு ப. இராசலிங்கம்**
(செட்டியமடம், வட்டுக்கோட்டை)
**திரு மு. வைகுந்தவாசன்**
(இலங்கைவங்கி, அச்சுவேலி)
**திரு S. விக்னேஸ்வரராசா**
(சுப்ராங் தொலைத்தொடர்பு சேவை, கதிரிப்பாய்)
**திரு சி. இராமகிருஸ்ணா ஆசிரியர்**
(வடமராட்சி கணிதக் கல்வி மூலவள நிலையம், கரணவாய்)
**திரு இ. சண்முகலிங்கம் J.P**
(பிரதானவீதி, தொண்டைமானாறு)
**திரு மு. இராசேந்திரா**
(தும்பளை, பருத்தித்துறை)
**திருமதி இராஜேஸ்வரி பத்மதேவா**
(இளை. ஆசிரியை, மீசாலை)
**திரு பொ. வெங்கடேஸ்வரன்**
(நகரசபை, பருத்தித்துறை)
**திரு M.P தர்மலிங்கம்**
( பத்திரிகை முகவர் உடுப்பிட்டி)
**திரு வ. பாலசிங்கம்**
(கிராம சேவையாளர், கரணவாய்)
**திரு ம. ஸ்ரீஸ்கந்தராசா**
(சிறுப்பிட்டி, நீர்வேலி)
**உரிமையாளர்**
(வேலழகன் இரும்புக் களஞ்சியம், சுன்னாகம்)
**திரு இ. சரவணபவன்**
(இந்து விருத்திச் சங்கம், ஆனைக்கோட்டை)
**உரிமையாளர்**
(அம்பிகாவதி பான்ஸ் கூட், யாழ்ப்பாணம்)
**திரு கோ. யோகலிங்கம்**
(கிளை. முகாமையாளர், புத்தூர்)

**திரு சி. நவரெத்தினம்**

(துவாரகை, கரணவாய்)

**திருமதி அ. குணநாயகம்**

(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)

**திரு ப. சிவராசா**

(தூதாவளை, கரணவாய்)

**திரு செ. சிவானந்தம்**

(கிராம சேவையாளர், புன்னாலைக்கட்டுவன் வடக்கு)

**திருமதி அருள்நங்கை சண்முகநாதன்**

(புதிய உயர்கலைக்கல்லூரி, யாழ்ப்பாணம்)

**திரு சி. தங்கராசா**

(ஆவரங்கால், புத்தூர்)

**திரு மார்க்கண்டு கருணாநிதி**

(நடராசா புடவைக்கடை, அச்சுவேலி)

**திரு S. குணராசா**

( தாளையடிலேன், திருநெல்வேலி)

**திரு உ. செந்தூரன்**

(பிரதான வீதி, அச்சுவேலி)

**திரு பா. அமிர்தலிங்கம்**

(அமிர்தா தொலைத்தொடர்பகம், ஊரெழு கிழக்கு)

**திரு கந்தையா நடராசா**

(இடைக்காடு, அச்சுவேலி)

**திரு அருந்தவசீலன்**

(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)

**திரு வை. கமலநாதன்**

(வர்த்தக முகாமையாளர், மானிப்பாய் கோ.ப.ப.நோ.கூ. சங்கம்)

**திருமதி கற்பகமலர் இரத்தினசிங்கம்**

(ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்)

**திரு பொ. பாஸ்கரன் J.P**

(சோமசுந்தரம்வீதி, ஆனைக்கோட்டை)

**திரு கு. சிவபாலராஜா**

(பொது சுகாதாரப் பரிசோதகர், நல்லூர்)

**திரு இ. கதிர்காமநாதன்**

(வங்களா ஒழுங்கை, மல்லாகம்)

**திரு A. விமலதாஸ்**

(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)

**திரு L.S ஜெகநாதன்**

(நாதஸ்வர வித்துவான், உடுப்பிட்டி)

**திரு க. ஆனந்தராசா**
(வதிரி, கரவெட்டி)
**திரு இரா. அருட்செல்வம்**
(A.T.C. ரியூசன் சென்ரர், இணுவில்)
**திரு செ. முருகதாஸ்**
(சாந்தை, பண்டத்தரிப்பு)
**திரு க. கந்தவனம்**
(ஜெயமலர் அகம், கப்பூது, கரவெட்டி)
**திரு செ. வேலாயுதபிள்ளை**
(திருவதிகை, அளவெட்டி)
**திரு வே. கணபதிப்பிள்ளை**
(குலானை, கரவெட்டி)
**திரு S. நேசன்**
(கேணியடி, யாழ்ப்பாணம்)
**திருமதி இராசரத்தினம் அருந்ததி**
(போதராமடம், துன்னாலை)
**திரு Dr V. கணேசவேல்**
(சுந்தரவேல் வைத்தியசாலை, அல்வாய்)
**திருமதி T. நடராஜா**
(சந்தனத்தரை, உடுப்பிட்டி)
**திருமதி சிதம்பரநாதன் சரஸ்வதி**
(குமுளடி, அல்வாய்)
**திரு சி. ஆனந்தராசா**
(ஆலடி, பொலிகண்டி)
**திரு சி. சிறீகாந்தன்**
(கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)
**திரு ஆ. சோமசுந்தரம்**
(சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில்)
**திரு நடராசா செவ்வேள்**
(தணிகை, நெல்லியடி)
**திரு க. பூலோகரட்ணம்**
(அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில்)
**திரு நா. வடிவேஸ்வரன்**
(தும்பளை பருத்தித்துறை)
**திரு சு. கிருபானந்தன்**
(கே.கே.எஸ் றோட், இணுவில்)
**திரு ஆ. சிவராசா**
(கரணவாய் தெற்கு, கரவெட்டி)
**திரு செ. மகேந்திரவர்ணன்**
(கற்பகப் பிள்ளையார் கோவில்லேன், உரும்பராய்)

உ

# ஆலய வழிபாட்டில் கோபுரதரிசனத்தின் முக்கியத்துவம்

செஞ்சொற் செம்மல் இரா. கேதீசன் அவர்கள்

தெய்வங்கள் கொலுவீற்றிருக்கும் இடம் ஆலயம் எனப்படுகின்றது. ஆலயம் என்பதன் பொருள் ஆன்மா இலயப்படும் இடம் என்பதாகும். இந்த ஆலயக் கட்டட அமைப்பில் முக்கிய இடம்பெறுபவை இராஜகோபுரங்கள் ஆகும். இவை அழகுடன் கூடிய இராஜ கம்பீரத்தையும் தெய்வச்சிறப்பையும் ஆலயங்களுக்குத் தருவதுடன் தமிழர்களின் கட்டடக் கலைக்கும் கலைத்திறனுக்கும் சான்றாக விளங்குகின்றது.

கோபுரங்களையே கோவில்களில் உள்ள தெய்வமாகப் போற்றி வணங்குகின்றனர். கருவறையில் உள்ளமூர்த்தம் சூட்சுமலிங்கமென்றும் கோபுரத்தை ஸ்தூலலிங்கம் என்றும் சமயநூல்கள் கூறுகின்றன. கோபுரங்களை வழிபடுவது பிரபஞ்சரூபமாக விளங்கும் சிவபெருமானை வழிபடுவதற்கு ஒப்பாகும் என்று கூறுவர். கோபுரங்கள் சிவபெருமானின் பேரண்டத் திருமேனியாகும். அண்டங்களில் காணப்படும் விலங்குகள், பறவைகள் அட்டதிக்குப் பாலகர்கள், அஷ்ட சக்திகள், அஷ்ட பைரவர்கள், தேவர்கள், முனிவர்கள், பசுக்கள் முதலிய வடிவங்கள் யாவும் இதில் இடம்பெறும். மகாபுராணங்கள், தல புராணங்கள் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள வரலாற்றுக் காட்சிகளை விளக்கும் சுதைச் சிற்பங்களும் இதில் இடம்பெறும்.

அதனால்த்தான் கோபுரதரிசனம் கோடி புண்ணியம் என்று உணர்ந்த சைவ உலகத்துக்கு திருமுறைகளைத் தந்த திருமுறைச் செல்வர்களான திருஞான சம்பந்தர், அப்பர் சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் எவ்வாறு கோபுர தரிசனம் செய்தனர் என்பதை தெய்வச் சேக்கிழார் பெரிய புராணத்தில் பின்வருமாறு கூறுகின்றார்.

சிதம்பரத்தை அடைந்த திருஞான சம்பந்தர் அங்குள்ள இராஜகோபுரத்தைக் கண்டவுடன் "பலன்கொள் மைந்தனார் ஏழு நிலைக் கோபுரம் பணிந்தெழுந்தனர் போற்றி" என்றும் சிதம்பரத்து இராஜ கோபுரத்தைக் கண்ட அப்பர் சுவாமிகள் "ஞாலத்திகழ் திருமறையின் பெருகொலி நலமார் முனிவர்கள் துதியோடும் ஓலம் பெருகியதிலையேழ் கோபுரம் உறமெய் கொடு தொழுது" உட்புகுந்தார். என்றும் சேரமான் பெருமாளுடன் வந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிதம்பரத்து இராஜகோபுரத்தைக் கண்டு "சிந்தை மகிழ எழுநிலைக் கோபுரத்தை வணங்கி அணைந்தார்" என்றும் தெய்வச் சேக்கிழார் பெரியபுராணத்தில் பதிவு செய்துள்ளார்.

ஆலயவழிபாடு செய்யச் செல்லும் அடியவர்கள் முதலில் ஆலய இராஜகோபுரத்தைக் கண்டவுடன் கைகளை உச்சிமேல் குவித்து கோபுர தரிசனம் செய்து அதன் வழியாகவே உள்ளே சென்று இறைவனை வலம்வந்து வழிபாடு செய்து நிறைவாக்குவார்கள். இதைப் போன்றே சிதம்பரத்தை வழிபாடு செய்யச்சென்ற நால்வர் பெருமக்களான மாணிக்கவாசக சுவாமிகள் சிதம்பரத்தின் கிழக்குக் கோபுரத்தை வணங்கி உட்புகுந்தார் என்றும் மேற்கில் அமைந்துள்ள கோபுரத்தை வணங்கி அப்பர் சுவாமிகள் அதன்வழியாக உட்சென்றார் என்றும்

திருஞானசம்பந்தர் சிதம்பரத்தின் தெற்குக் கோபுரத்தை வணங்கி உட்சென்றார் என்றும் தம்பிரான் தோழரான சுந்தரர் வடக்குக் கோபுரத்தை வணங்கி உட்சென்று தில்லைக் கூத்தனை வழிபாடு செய்தனர் என்று அறியமுடிகின்றது. இதைக் குறிக்கும் வகையில் ஒவ்வொரு வாயிலிலும் அவ்வழியாக வந்த நாயன்மாரையும் பூரணகும்பம் கொடுத்து வரவேற்கும் தில்லை மூவாயிர (மூவர்)ரையும் சுதைச் சிற்பமாக அமைத்து வண்ணம் தீட்டிப் பொலிவுபடுத்தியுள்ளதை சிதம்பரத்தில் காணலாம்.

கோபுரதரிசன வழிபாட்டின் சிறப்பை சைவத் திருமுறைகளிலும் நாம் காணமுடிகின்றது. அப்பர் சுவாமிகள் வாக்காக "அரன்கோயில் வலம் வந்து கோல கோபுரக் கோகரணம் சூழாக் கால்களால் பயன் என்ன?" என்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெஞ்சமா கூடல் பதிகத்தில் "வளங்கொள் மதில், மாளிகை, கோபுரம், மணிமண்டபம், ஆறு ஆகிய ஐந்தும் ஒரு ஊருக்குச் சிறப்புத் தருவன" என்றும் திருமூலர் "தேகமே சிவாலயம் என்றும் அதற்கு வாய் கோபுரவாசலாக இருக்கிறதென்றும்" குறிக்கின்றார்.

பிரபஞ்ச ரூபமாக விளங்கும் சிவபெருமானை குறிக்கும் இராஜ கோபுரங்களுக்கு முன்னால் கோபுர வாசல் தரிசன பெரும் திருவிழா என்ற விழாக்கள் சில ஆலயங்களில் நடைபெறுவதைக் காணலாம். குறிப்பாக இவை இந்தியாவில் உள்ள கோயில்களில் நடைபெறுவது உண்டு. சென்னை கபாலீசுவரர் ஆலயத்தில் கோபுர தரிசனபெருவிழா சிறப்பாக நடைபெறும். இதைக் காண திரளான மக்கள் கூடி விஸ்வருபமாக உள்ள இராஜகோபுரத்துக்கு முன்னால் இறைவனையும் பரிவார மூர்த்திகளையும் அலங்கரித்து வாகனங்களில் அமர்த்தி, நிறுத்திக் கற்பூரக் கிளையால் பெரிய தீபாராதனை செய்து கோபுர வாசல் தரிசன விழாவைக் கண்டு மகிழ்வர்.

ஆலய மகோற்சவங்களில் சப்பறத் திருவிழா என்று ஒன்று நடைபெறும். இது தேர்த்திருவிழாவுக்கு முதல்நாள் நடைபெறும். இதை சகோபுரக் காட்சி என்று சொல்லுவார்கள். இதன் பொருள் இறைவனை கோபுரத்துடன் சேர்த்து வழிபடுவது ஆகும். இந்த சப்பறம் அகன்ற சகடையில் இறை நிலையை உணர்த்தும் வண்ணம் படங்கள் கூடிய படல்களாக வடிவமைத்து கீழ்ப் படல்கள் அகன்றும் மேற்படல்கள் ஒடுங்கியும் அதன் உச்சியில் கலசங்களும் (முடி) வைக்கப்பட்டு இறைவனும் இறைவியும் இடப வாகனத்தில் எழுந்தருளிவரும் காட்சி ஆகும். இதைப் பார்க்கும்போது இறைவன் கோபுரத்தில் எழுந்தருளிக் காட்சி தரும் கோபுர தரிசனம் ஆகும். இதை "தெருவடச்சான் விழா" என்று அழைக்கின்றனர்.

எனவே ஆலய வழிபாட்டில் கோபுர தரிசனம் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. ஆலய முகப்பில் உள்ள இராஜ கோபுரம் வெறும் கல்லாலும் சாந்துக் கலவைகளாலும் கட்டப்பட்ட கட்டடம் அன்று. அது இறைவனின் ஸ்தூலலிங்கம் என்று உணர்ந்து அதை முதலில் வழிபட்டு ஆங்கு எழுந்தருளி உள்ள இறைவனை வழிபாடு செய்து சகல செல்வயோகமிக்க பெருவாழ்வைப் பெற்று நமது வாழ்வை புனிதப்படுத்துவோமாக.

உ

(தொடர்ச்சி...

# ராம பிரம்மம்

## திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்

அஞ்சனை பெற்ற தவப்புதல்வனும், அஞ்சன வண்ணன் இராமரின் தூதுவனும், வேகமாக வீசும் வாயுபகவான் பெற்ற அநுமானும், வாலி மகன் அங்கதனும் ஏராளமான மலைகளைக் கொண்டுவந்துபோட்டு, கடலில் அணை கட்டி, பகைவனான இராவணனுடைய ஊருக்குப் போனார்கள்.

**கடிதுலாவு வாயுபெற்ற**
**மகனும் வாலி சேயுமிக்க**
**மலைகள்போட ஆழிகட்ட மிகவூர் போய் (துடிகனோய்)-- திருப்புகழ்.**

இராவணன் ஆயிரம் மறைபொருள் உணர்ந்து அறிவு அமைந்தவன். வெள்ளியங்கிரியினை விடையின் பாகனோடு அள்ளி விண்தொட எடுத்தவீரன். அவன் சீதையை இதயமாம் சிறையில் வைக்கின்றான். பிறர்மனை நயத்தல் எனும் தீமை அப்பொழுது அவனிடத்தில் குடிகொள்கிறது. அது அவனை வீழ்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்லப்போகிறது என்பதை அப்போது அவன் உணரவில்லை. மாய மானாகச் சென்று இறப்பதற்கு முன்பு மாரீசன் உணர்கிறான். அரக்கன் மாரீசன் அறத்தின் திறத்தினை உணர்ந்த மகாஞானி இராமன்,

**அறம்தலை நிறுத்தி வேதம் அருள் சுரந்து அறைந்த நீதித்**
**திறம்தெரிந்து உலகம்பூணச் செந்நெறி செலுத்தித் தீயோர்**
**இறந்து உக நூறித்தக்கோர் இடர்துடைத்துஏக, ஈண்டுப்**
**பிறந்தனன் தன் பொன் பாதம் ஏத்துவான் பிறப்பு அறுப்பான்.**

பரப்பிரம்மம் என்பதை அறிந்தவன் மாரீசன். ஆண்பலம் கொண்ட இராவணன், சீதைபால் கொண்ட பெருங்காமம் காரணமாக இராமன் கையால் அழிந்துவிடப் போகின்றான் என்பதை அறிந்து அறவுரை சொல்கிறான். "வேதங்களை ஓதிப் பயின்று தெளிந்த நல்லறிவு கைவந்த அறிஞனே, மூவுலகையும் ஒரு குடைக்கீழ் அரசு செய்யும் பெரும்பேறு பெற்று இருக்கிறாய், இப்பெரும் பேற்றினை ஐம்புலன் அடக்கி அருமையான தவம் பல புரிந்து பெற்றாய் அன்றித் தீவினை புரிந்து பெற்றாய் இல்லை. அறத்தினையும், அறத்தைச் சார்ந்த தவத்தினையும் செய்ததனால் அன்றோ, இன்று நீ இந்தப்பேறு பெற்றாய். இப்போது அறம் அல்லாதது செய்து, வீணே அழிவின் வாசற்படிக்கு வருவது அறிவுடைமையாகுமா? என அறிவுரை சொன்ன மாரீசன் சொல்லைக் கேட்க இல்லை இராவணன். விதி யாரை விட்டது?

தம்பி விபீஷணன் அண்ணன் இராவணனைப் பார்த்து நல்ல புத்தி சொல்கிறான். "அண்ணா, இந்த இலங்கையைக் குரங்கு எரித்து விட்டதாக எண்ணுகிறீர்களா? இல்லவே இல்லை. சீதாபிராட்டியின் சீரிய கற்பே இலங்கையைச் சுட்டு எரித்தது. மனிதன் கெடுவது மண்ணாசையாலும், பெண் ஆசையாலும் என்பதை மறந்துவிடாதே.

உன்னுடைய மங்காத புகழ் பெண் ஒருத்தியினால் மாண்டு மடியப்போகின்றது. நீ தவஞ் செய்து பெருவரங்கள் பெற்ற காலத்தில் மனிதர்களினால் அழிவு நேரக் கூடாது என்று வரம்வேண்டவில்லை. கயிலைமலையை நீ தூக்கியபொழுது விலங்கு ஒன்று உன்னை வெல்லும் என்று நந்திதேவர் சாபம் கொடுத்தார். அதனால் வாலி உன்னை அழிக்கப் பார்த்தான். நல்ல வேளை நீ தப்பினாய். முன்னர் வேத வதிபால் நீ தகாதது செய்தாய். அவள் தீக்குளிக்கின்றபோது, 'மறுபிறப்பில் உன் அழிவுக்கு நான் காரணமாவேன்' என்றுகூறி இறந்தாள். அவள்தான் சீதையாகத் தோன்றி இருக்கிறாள். சீதையை நீ சிறை வைத்ததனால் இலங்கையே அழிந்துவிடப் போகின்றது. இராமன் வில் சாதாரண வில் ஆகாது. அந்த வில்லிலிருந்து கிளம்பிய ஒரேஒரு பாணம் வாலியின் உயிரைக் குடித்ததை நீ அறிவாய். சீதையைச் சிறை விடு பழிபாவத்துக்கு ஆளாகாதே" என அறிவுரை சொன்னான்.

இராவணன் சிரிக்கிறான். திருமால் இராமனாக வந்திருக்கிறான் என்கிறாய். அந்தத் திருமால் எத்தனை முறை எனக்குப் பயந்து ஓடியவன் தெரியுமா? திருமால் என்ன சிவபிரானே எனக்குப் பயந்தவர் என்பதை நீ அறியமாட்டாயா? என அகந்தையின் சிகரத்தில் நின்று எள்ளி நகையாடுகின்றான். நீ போருக்குப் போக வேண்டாம். நானே போகிறேன். நீயும் இந்த ஆட்சியைக் கைப்பற்றலாம் என நினைக்கிறாய். உன்னை என் வாளுக்கு இரையாக்கி இருப்பேன். உடன் பிறந்தானைக் கொன்றான் என்று உலகம் பழிக்கும். அதனால் விட்டுவிடுகிறேன். ஓடிப் பிழைத்துக் கொள்" என வாளை ஓங்குகிறான். இராமபிரானே தஞ்சம் என விபீஷணன் இராமனைச் சென்று அடைகிறான். விபீஷண சரணாகதியைக் கூறும் திருப்புகழ்

பருதி மகன் வாசல் மந்திரி
அநுமனொடு நேர் பணிந்து
பரித கழையா முன்வந்து பரிவாலே
பரவிய விபீடணன் பொன்
மகுட முடி சூடநின்ற – ரகுபதி இராமச்சந்திரன் (சுருளள கபார) – திருப்புகழ்.

சூரியன் மகன் சுக்கிரீவனின் மந்திரியாக இருந்த அநுமார் உதவியால் அவருடன் இராமரை அடைந்து, இராமர் சந்நிதியில் வணங்கி, மிகுந்த அன்போடு துதி செய்தான் விபீஷணன். அவனுக்குப் பொன்னால் செய்த மணிமகுடத்தைச் சூட்டினார் இராமர்.

வானரப் படைகளுடன் இராம பிரான் யுத்த களத்திற்குப் புறப்படுகிறார். இப்போதாவது இராவணனுக்கு நல்ல புத்தி சொல்லிப் பார்ப்போம் என நினைத்து விபீஷணனிடம், "ஒரு தூதுவனை இராவணனிடம் அனுப்புவோம். செருக்கினால் தலைகால் தெரியாமல் வாழ்கின்ற இராவணன் சீதையைச் சிறை நீக்கி விட்டால், அவன் பல்லாண்டு வாழ்க. இது தான் யுத்த தர்மம்" என்கிறார் கருணைப் பிரபு. அங்கதனை அனுப்புகிறார்கள். அங்கதனைக் கண்டதும் "சிவன், திருமால் கூட என்னுடைய உத்தரவு இல்லாமல் இலங்கைக்குள் வரமுடியாது. உத்தரவு இல்லாமல் உள்ளே பிரவேசித்த உன்னைச் சும்மாவிட முடியாது" என்று கர்ச்சிக்கிறான் இராவணன். நான் வாலியின்

உலகில் பாவம் உண்டு என்றால் அது ஒருவனின் பலவீனம்தான்.

மைந்தன் அங்கதன். ஏகசக்கராதிபதி, சீதை கணவன், தெய்வநாயகன், வேத நாயகன், மேல் நின்ற விதிக்கு நாயகன், இராமபிரானுடைய தூதுவன் நான். நீ பெரும் தீங்கு செய்தும் இராமபிரான் உன்னிடம் கருணை காட்டுகிறார். சீதையை சிறை நீக்கிப் பல்லாண்டு வாழ்வாயாக அன்றேல் போர்க்களத்தில் உன் உயிர் போவது உறுதி என்று உன்னிடம் சொல்லு மாறு தூதாக அனுப்பினார்' என்றான் அங்கதன். இராவணன் கடுங்கோபங் கொண்டு 'இந்தக் குரங்கைப் பிடியுங்கள்' எனக் கட்டளையிட நான்கு அரக்கர்கள் அங்கதன்மீது பாய்கிறார்கள். எல்லோரை யும் கொன்று திரும்பிவந்து இராமபிரான் திருவடிகளைப் பணிந்து, சுவாமி! இராவண னுடைய பத்துத் தலைகளும் பூமியில் உருண்டாலன்றி அவன் சீதாப்பிராட்டிமேல் வைத்த ஆசையை விடவேமாட்டான்' என்று முடிவையும் சொல்கிறான். இராமன் பெரு மையையும், தரும நெறியையும் அறிந்து கொள்ள முடியாது. ஊழ்வினையால் இராவணன் அழிவுக்கு வழிதேடினான். விதி வலியுது. கொடியது. நித்திரையிலிருந்து கும்பகர்ணனை எழுப்பி போர்க்களம் போகச் சொன்னபோது;

**ஆனதோ வெஞ்சமர் அலகில் கற்புடைச்**
**சானகி துயர் இனும் தவிர்ந்ததில்லையோ**
**வானமும் வையமும் வளர்ந்தவான் புகழ்**
**போனதோ புகுந்ததோ பொன்றுங் காலமே**

என நொந்து இராவணனுக்குச் சொன்ன அறவுரைகளை அவன் கேட்க வில்லை. இராவணன் மைந்தன் மேக நாதன், இந்திரனை வென்றதால் இந்திர ஜித்து என்ற பெயர் பெற்றவன். வானவரை வென்று வான்புகழ் பெற்றவன். சிறை இருந்த செல்வியை மீட்க இந்தப் போரில் இளையபெருமாளோடு போர் செய்து தேரிழந்து மாயமாக மறைந்து நேராக இராவணனிடம் வருகிறான். "மகனே, என்ன நடந்தது சொல்" எனக் கேட்கிறான் இரா வணன். "ஐயனே, அந்த இலக்குவன்மீது நாராயணாஸ்திரத்தைச் செலுத்தினேன். அது அவனை வலம் வந்து வணங்கியது. அதனிலும் வலிய படைவேறு என்ன இருக் கிறது? நம் முன்னோர் செய்த பாவத் தினால் நீ கொடும் பழி தேடினாய். இலக் குவன் இன்னும் சினந்ததாகத் தெரிய வில்லை. அவன் சினந்தால் உலகம் மூன்றும் சிதையும். அவன் தேவாஸ்திரங் களை விடாதபடியால் உயிரோடு திரும்பி வந்தேன். நான் போருக்கு அஞ்சி இவற் றைச் சொல்லவில்லை. நிறைந்த செல்வத் துடன் நீ நெடுங்காலம் வாழவேண்டும் என்ற ஆசையினால் சொல்கிறேன். சீதையை சிறை விடுவாயாயின் இராம இலக்குமணர் சீற்றந் தணிவர். நம்மை மன்னிப்பர். நினைக்கும் வாழ்வு வந்து அமையும்" என்றான்.

"பேதாய்! உன்னை நம்பி, உன் தோள் வலியை நம்பிச் சீதையைக் கவர்ந்துவரவில்லை. இப்பகையை நான் தேடவும் இல்லை. எடுத்து வந்த மங் கையை நான் கொடுத்துவிடப் போவதும் இல்லை. சமர் புரிந்து ஆவியை விடுவேன்; தேவியை விடேன்; அழியும் உலகில் அழியாது நிற்பது புகழ். மானமே என் உயிரினும் பெரிது" எனச் சீறிச் சினக் கிறான் இலங்கை வேந்தன்.

இலக்குவனோடு போர்புரிந்து ஆவி துறந்து அரும்புகழ் பெறுகிறான் இந்திர ஜித்து (தொடரும்...

படைகளைவிட எண்ணங்களே வலிமை பெற்றவை.

உ

# சித்தசுத்தி

திரு சு. இலங்கநாயகம் அவர்கள்

சைவசித்தாந்த தத்துவம் முப்பத்தாறு. மண்முதல் குணம் வரையுள்ள 24இலும் ஆன்ம தத்துவம். அடுத்த 7உம் வித்தியா தத்துவம். அடுத்த 5உம் சிவ தத்துவம். ஆன்ம தத்துவத்தில் ஈறாகவுள்ளது அந்தக்கரணம். அந்தக்கரணம் ஒன்றாக இருந்தபோதும் அதன் செயற்பாடுகள் நான்கு வகையாக அமைந்துள்ளன.

1. நினைப்புக்கும், உணர்ச்சிகள் அனைத்திற்கும் உறைவிடமாக இருக்கும்போது அது- சித்தம்.
2. சங்கல்ப, விகல்ப மயமாயிருக்கும்போது அது- மனம்
3. நல்லது, கெட்டது என்று பாகுபடுத்தி ஆராயும்போது அது- புத்தி
4. செயலுக்குத் தான்தான் கர்த்தா என்று உணரும்போது அது- அகங்காரம்

இந்தச் சித்தம் சுத்தம் அடையும் போது சிவன் அருளைப் பெறமுடியும். திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளும் "சித்தம் தெளிவீர்காள், அத்தன் ஆருரை, பக்தி மலர் தூவ, முத்தியாகுமே" என் கிறார். திருமூலரும் "உள்ளம் பெரும் கோயில்" என்கிறார். நாவுக்கரசரும் "நிலை பெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா" என ஆலயத்துக்கு அழைத்துச் செல்கிறார்.

எனவே, சித்தம் சுத்தம் அடைய நாம் எம்மால் இயன்றளவு சமூகத்தொண்டு, சமயத் தொண்டுகளில் ஈடுபடவேண்டும். நம் முன்னோர்கள் சிறிய சிறிய தர்மங் களை தலைமுறை தலைமுறையாகச் செய்து வந்துள்ளார்கள். நாயன்மார்கள் தொண்டு செய்து உய்ந்தவர்கள். நம் முன்னோர்கள் போட்டி, பொறாமை இன்றி குடும்பங்களுக்கிடையே பரஸ்பரம் உதவி செய்து மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்தார் கள். சாதாரணமாக குடும்பங்களில் ஏற் படும் திருமணச்சடங்கு, மரணச்சடங்கு போன்றவற்றில் அவர்களது உறவினர்கள் ஒன்று சேர்ந்து அதற்குரிய செலவுகளைச் செய்தும், சரீர உதவிகள் செய்தும் நிறைவேற்றுவார்கள்.

அக்காலத்தில் ஏழைகளுக்கு மக்கள் தாமாகவே முன் வந்து உதவி செய்வார்கள். ஒரு திருமணத்திற்குச் செல் பவர்கள் அந்தக் குடும்பத்திற்குத் தங்க ளால் இயன்றளவு, தமது வசதிக்கு ஏற்றாற் போல் பண உதவி செய்வர். இதனால் திருமணத்தை நடாத்தும் குடும்பத்திற்கான சுமை குறைகிறது. சிறுதுளி பெரு வெள் ளம் என்றதுபோல் பலரும் சிறு சிறு தொகை கொடுக்கவே மொத்தமாக கணிசமான தொகை கிடைக்கிறது. அக்காலத்தில் ஏழை பணக்காரன் என்ற அதிக வேறுபாடு இருக்கவில்லை. வசதி உள்ளவன் வசதி இல்லாதவனுக்குச் செய்யும் உதவியும் ஒருவகையில் தர்மம் ஆகிறது. உதவி யைச் செய்பவனின் சித்தம் அதிகம் சுத்தமாகிறது.

வறிய மக்களுக்கு உணவையோ அல்லது பணத்தையோ கொடுக்கும்போது ஏற்பவனிடத்தும், கொடுப்பவனிடத்தும் உண்மையான சந்தோசமும், பிரியமும் நிரம்பி இருந்தன. தற்காலத்தில் வசதி படைத்த மக்கள் பிறந்தநாள் விழா,

இரும்பை இரும்பால்த்தான் வெட்ட வேண்டும்.

திருமண விழா போன்றவற்றுக்குப் பெருந் தொகைப் பணம் செலவுசெய்கிறார்கள். ஒருவர் செய்வதைப் பார்த்து மற்றவரும் செய்யமுனைகிறார். இதனால் மக்களிடத்து பரஸ்பர ஒற்றுமை குறைந்து போட்டியும், துவேசமும் ஏற்பட வழிவகுக்கிறது. எனவே, சமூகத்தில் தமது சூழலுக்கு ஏற்ப ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் பாராட் டாது வாழப்பழகிக்கொள்ள வேண்டும். எனவே, நமது செயற்பாடுகளால் மற்றவர் களுக்குத் தூண்டுதல் ஏற்படாமல் நடந்து கொள்வதன்மூலம் நமது சித்தம் சுத்தம் அடைகிறது.

நமது பிரதேசங்களில் தற் போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அகதி வாழ்வும், அனாதை இல்லங்களும், முதியோர் இல்லங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன. எனவே நாம் ஒவ்வொரு வரும் ஆடம்பர வாழ்வைக் குறைத்து சிக்கனம் மேற்கொண்டு எமது வருவாயில் மிச்சம் பிடித்து சேமிக்கும் பணத்தில் ஒரு பகுதியை ஏழைகளுக்கு உதவவும், வசதி குறைவான கல்வி பயிலும் மாணவர் களுக்கு உதவி செய்யவும் பயன்படுத் தலாம். இப்படிச் செய்யும் நமக்கு ஒரு மனத்திருப்தி ஏற்படுகிறது.

மேலும் பணவசதி இல்லாதவர்கள் தாம் என்ன செய்யமுடியும் என்று நினைக் கக் கூடாது. பணம் இல்லாவிடின் உடல் உதவிகளை மற்றவர்களுக்குச் செய்ய லாம். பல சிரமதானப் பணிகளில் ஈடுபட லாம். ஆலயங்கள் அமைத்தல் குளம் தோண்டுதல், நூல் நிலையம் அமைத்தல், பாடசாலை கட்டுதல் போன்றவற்றுக்கு பண உதவியோ, சரீர உதவியோ செய்ய லாம். அதேவேளை நமது ஆலயங்களிலும் பல பணிகளை மேற்கொள்ளலாம். ஆலய வீதிகளைத் துப்புரவு செய்தல், நந்தவனம் வளர்த்தல், பூக்கள் கொய்து கொடுத்தல், பூமாலை கட்டுதல், கூட்டுதல், கழுவுதல் போன்ற பணிகளில் ஈடுபடலாம். இவற்றைச் செய்வதற்குப் பணம் இல்லாவிடினும் சரீரத் தொண்டு மேற்கொள்ளலாம்.

இப்படியாகப் பல சமய சமூகப்பணி கள் செய்வதன்மூலம் நமது மனது பக்கு வப்பட்டால்த்தான் சித்தசுத்தி ஏற்படும். அந்தச் சுத்தமான சித்தத்தில் ஈஸ்வரனின் திருவுருவத்தைப் பார்க்கமுடியும். கலங்கிய நீரில் பிம்பம் தெரியாது. அதுபோல் எமது சித்தம் கலங்கினால் சிவனைக் காண முடி யாது. எனவே இறைபக்தியோடு, மற்றவர் களுக்கு இயன்ற உதவியைச் செய்வதால் பொறாமை, பேராசை, கோபம், இன்னாச் சொல் ஆகிய நான்கும் அற்று சித்தம் தெளிந்து சுத்தம் அடையும்போது சிவரூப தரிசனம் செய்து இறைவன் அருளைப்பெற முடியும்.

### சமநிலை

துன்பம் வரும்போதும், இன்பம் வரும்போதும் மனம் கலங்காது ஒரே தன்மையாக இருக்கவேண்டும். இராமபிரான் இதற்குச் சிறந்த உதாரணமாவார். “இந்த நாட்டிற்கு அரசன் ஆவாயாக” என்று சொன்னபோதும், “அன்று இரவே சடைமுடியோடு கானகம் செல்வாயாக” என்று சொன்னபோதும் மகிழ்ச்சியோ, கவலையோ இன்றி ஒரே நிலையில் இருந்தார்.

**தீயவன் ஒருவன் உத்தமன்போல் நடிக்கும்போது மோசம் மோசமாகிறான்.**

# வருடாந்த வைகாசிப் பெருவிழா – 2009



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வருடாவருடம் நடாத்தப்பட்டுவரும் வைகாசிப் பெருவிழாவானது 05.06.2009 வெள்ளிக்கிழமை அன்று அன்பர்களின் அனுசரணையுடன் வழமைபோல் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வானது ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகியது. இந்நிகழ்வுகளின் வரிசையில் பேராசிரியர் S. சிவலிங்கராஜா அவர்களின் விஷேட சொற்பொழிவு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து இவ்விழாவில் ஆச்சிரமம் ஆற்றிவரும் சமூகப்பணிகளின் வகையில் திருமதி புஸ்பனேஸ்வரி என்பவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது. அடுத்து தன்னிச்சையாக நடமாட முடியாத திருமதி ஜெயராமக் குருக்கள் யோகமலர் என்பவருக்கு நான்கு சக்கர தள்ளுவண்டி வழங்கப்பட்டது.

மேலும் ஆச்சிரமத்தில் நடைபெறும் வாராந்த வெள்ளி நிகழ்வில் யா/ சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய மாணவர்களின் கலைநிகழ்வுகளைத் தொடர்ந்து வழமையாக ஆச்சிரமத்தில் இடம்பெறும் மாகேஷ்வர பூசையுடன் நிகழ்வுகள் இனிதே நிறைவடைந்தது.

## வைகாசிப் பெருவிழாவிற்கு அனுசரணை நல்கிய அன்பர்கள்

| | | | |
|---|---|---|---|
| வ. இராசையா | கேணியடி | திருநெல்வேலி | 2000. 00 |
| த. கணேசமூர்த்தி | வங்கி ஊழியர் | யாழ்ப்பாணம் | 1500. 00 |
| இ. இராசநாயகம் | | துர்க்கா மரக்காலை | 1000. 00 |
| V. அரியராசா J.P | | தொண்டைமானாறு | 1000. 00 |
| ச. வைத்தியநாதக் குருக்கள் | பிரதமகுரு | கந்தவனம் ஆலயம் | 1500. 00 |
| வை. துரைராசா | ஒஸ்காலேன் | உடுப்பராய் | 2500. 00 |
| கிருஷ்ணாஷ் ஸ்ரோர்ஸ் | | சங்கானை | 1000. 00 |
| காசிப்பிள்ளை அன்சன்ஸ் | | சங்கானை | 1000. 00 |
| S. சுந்தரலிங்கம் | "செல்வம்ஸ்" சிவலிங்கப்புளியடி | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| சண்முகானந்தா புடவையகம் | பெரியகடை | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| லிங்கம் கூல்பார் | | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| செ. நவரெத்தினராசா J.P | கப்பூது | குப்பிளான் | 5000. 00 |
| ஜெகதீஸ்வரன் தர்மவதனி | | லண்டன் | 5000. 00 |
| மகாராணி புடவையகம் | | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| மா. சிவஞானசுந்தரம் | இளை. நில அளவையாளர் | இடைக்காடு | 1000. 00 |
| ம. ஸ்ரீகாந்தன் | | அச்சுவேலி | 5000. 00 |
| A.S.S. இராமச்சந்திரன் | மாலிசந்தி | அல்வாய் | 2000. 00 |
| த. சிவகுருநாதன் | துவாரகா வெதுப்பகம் | நவிண்டில் | 4000. 00 |
| Dr E. கனகரத்தினம் | கொற்றாவத்தை | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| சுந்தர்சன்ஸ் | | மானிப்பாய் | 3000. 00 |
| Dr சி. இராசலிங்கம் | | அச்சுவேலி (கொழும்பு) | 1000. 00 |
| திருமதி தவமலர் சுரேந்திரநாதன் இளை. அதிபர் | மயிலியதனை | தொண்டைமானாறு | 2000. 00 |
| பாக்கியரட்ணம் ஹாட்வெயார்ஸ் | | சங்கானை | 2000. 00 |
| க. சொர்ணவடிவேல் | கதிர்காமசிங்கம் அன்சன்ஸ் | அளவெட்டி | 1000. 00 |
| ஐ. சண்முகலிங்கம் ஆசிரியர் | கரணவாய் தெற்கு | கரவெட்டி | 1500. 00 |
| திரு வ. ஆறுமுகம் இளை. அதிபர் | | புத்தூர் | 2000. 00 |

## ஆடிமாத ஆலய விசேட உற்சவ தினங்கள்

**06.07.2009 ஆனி 22 திங்கள்**

இரவு வருடாந்த குளிர்ச்சி பொங்கல்

**12.07.2009 ஆனி 28 ஞாயிறு**

சின்ன ஆண்டியப்பர் பூசை

**17.07.2009 ஆடி 01 வெள்ளி**

கார்த்திகை விசேட உற்சவம்

**22.07.2009 ஆடி 06 புதன்**

கதிர்காமக் கந்தன் கொடி

நன்மையைப் போலவே தீமையிலிருந்தும் மனிதன் பெரும் பாடங்களைக் கற்கிறான்.

உ

(தொடர்ச்சி...

# தவமுனிவனின் தமிழ் மந்திரம் (கட்டுரைத்தொடர்- 26)

சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்கள்

சைவசமயத்தவர்களுக்குரிய அடையாளங்களாகப் புறச் சிவசின்னங்களாகிய விபூதி, உருத்திராக்கமும், அகச் சிவ சின்னமாகிய பஞ்சாட்சர மந்திரமும் போற்றப்படுகின்றன. "நீறில்லா நெற்றி பாழ்" என்பது தமிழ் மூதாட்டி ஔவையின் வாக்காகும். விபூதியின் பெருமையைப் பதின்மூன்று உபநிடதங்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. "விபூதியைக் கைநழுவ விடாதே" என்றே உபநிடதங்கள் அறிவுரை வழங்குகின்றன. திருநீறு பூசாதவனின் முகம் சுடலைக்குச் சமன் என்று சூதசங்கிதை என்ற நூல் குறிப்பிடுகிறது. ஞானக் குழந்தையாகிய சம்பந்தர் பாண்டிய அரசனின் வெப்புநோயை நீக்கியதன்மூலம் சிவசின்னங்களில் ஒன்றாகிய திருநீற்றின் பெருமையை உலகறியச் செய்தார்.

இறைவனே பூசிக்கொள்ளும் உடலுக்குக் கவசமாகிய திருநீற்றைச் சிறிதும் தடையில்லாமல் நாமும் உடலில் பூசி மகிழ்ந்தால் தீவினைகள் நீங்கும். மோட்ச இன்பம் கிடைக்கும். இறைவனது அழகிய திருவடிகளை அடையலாம் என்பதைப் பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்குகிறது.

**கங்காளம் பூசும் கவசத் திருநீற்றை**
**மங்காமல் பூசி மகிழ்வரேயாமாகில்**
**தங்கா வினைகளும் சாரும் சிவகதி**
**சிங்காரமான திருவடி சேர்வாரே**

ஞானிகள் வேடம்போட்டு உலகினை ஏமாற்றும் சமயவியாபாரிகள் பலர் இப்பூவுலகிலே நடமாடித் திரிகிறார்கள். மெய்யுணர்வு எள்ளளவும் இல்லாமல் கழுமரத்தடி நாய்போல இவர்கள் கத்தித்திரிவார்கள். மன ஒருமைப்பாடு இல்லாது குரங்கு போன்று கொப்புக்கு கொப்புத் தாவும் இயல்புடைய இவர்கள் கழுகு போன்று பிறரைக் கொத்தித் திரிவர். நாடகத்தால் ஞானிபோல் நடித்து நானிலத்தில் வாழும் மக்கள் அனைவரையும் நயவஞ்சகமாக ஏமாற்றிப் பிழைப்பார்கள். ஞானி போல வேடம் போட்டுத் தன்னை விளம்பரப் படுத்தித் தமது வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வார்கள். ஆனால் உண்மையான பக்குவம் உள்ள ஞானிகள் பொறி புலன் முதலிய உடலுடன் கூடியிருந்தும் உலகியல்ச் செயற்பாடுகளில் நாட்டமின்றிப் பற்றின்றிச் செத்தாரைப்போன்று திரிவார்கள். வேடதாரிகளுக்கும் உண்மையான ஞானிகளுக்கும் உள்ள வேறுபாட்டினைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

**கத்தித் திரிவர் கழுவடி நாய்போற்**
**கொத்தித் திரிவர் குரக்களி ஞானிகள்**
**ஒத்துப் பொறியுமுடலு மிருக்கவே**
**செத்துத் திரிவர் சிவஞானியோர்களே.**

உடல், பொருள், ஆவி மூன்றையும் சிவனுக்கு அர்ப்பணம் செய்பவரே உண்மையான சிவ வேடத்தவர் ஆவார். அன்பு வயப்பட்டு உள்ளம் உருகி இறைவனை வழிபட்டால் அவருடைய திருவருட் பேற்றினை பெறுவது உறுதி என்பதை.

**அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை**
**ஆனந்தம் ஆய்க் கசிந்து உருக**
**என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்**
**யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறு**

எனத் தெய்வ வாசகமாகிய திருவாசகம் குறிப்பிடுகிறது. திருவருட் துணையால் சிவனுக்கு அடிமையாகி அச்சிவனார் உடமையாகிய தனது உடல் அவர் உறையும் பொற்பதி என்று நாடுதலாகிய உண்மையுணர்வு கொள்ளுதலால் அறியாமையாகிய மலவிருள் அகலும். மலவிருள் அகன்றதும் தன் முனைப்பால் செய்யும் இருவகைச் செயல்களும் நீங்கும். இவை அகன்றதும் தெளிவினை உடையவர்கள் ஆகி இறைவனுக்கு மீளா அடிமையர் ஆவார்கள். பூரண சரணாகதியாக இறைவனைப் பற்றி நிற்கும் நிலையில் கொள்ளும் சிவக்கோலமே உண்மையான தவக்கோலமாகும்.

**அருளால் அரனுக்கு அடிமை அது ஆகிப்**
**பொருளாம் தனது உடல் பொற்பதி நாடி**
**இருளானது இன்றி இருஞ்செயல் அற்றோர்**
**தெருளாம் அடிமைச் சிவவேடத்தாரே.**

அஞ்ஞானமாகிய இருளினால் ஒளி மழுங்கிய கண்களை ஞானம் என்கின்ற துலக்குமாற்றல் வாய்ந்த கருவியால் திறக்கவல்ல திறமையாளன் எவனோ அவனே ஞானகுரு என இந்துக்களின் ஞானக்களஞ்சியமாகிய உபநிடதங்கள் கூறுகின்றன. சூரியனைக் கண்டு தாமரை மலர்வதுபோல ஆசாரிய சம்பந்தம் ஒருவனுக்குக் கிடைத்தால்த்தான் அவனிடம் அகத்திலே ஞான மலர்ச்சி ஏற்படும் எனச் சங்கராச்சாரியார் விஷ்ணு பகவான் மீது பாடிய தோத்திர நூலாகிய பஜகோவிந்தத்திலே குறிப்பிடுகின்றார். ஆனால் பிரபஞ்ச மயக்கத்தில் வாழ்கின்ற நாம் நமது அக இருளாகிய அஞ்ஞானத்தைப் போக்கக் கூடியவர்களைக் குருவாகக் கொள்கின்றோம் இல்லை.

அஞ்ஞானத்தை நீக்கித் தெய்வ ஒளியைக் காட்டுகின்ற குருமார்களைச் சென்றடையாமல் அறிவிலிகளைச் சார்ந்து நின்று தங்கள் வாழ்நாளை வீண்நாளாக்கித் துன்பத்தில் வீழ்கிறார்கள். குருடனுக்குக் குருடன் பாதை காட்டுவதுபோல நாமும் நமக்குத் தவறான வழிகாட்டுபவர்களையே குருவாகக் கொள்கின்றோம். குருடும் குருடும் சேர்ந்து குருட்டாட்டம் ஆடிக் குழியில் வீழ்கின்றோம் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடலின் ஊடாகத் தவயோகி உணர்த்துகின்றார்.

**குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்**
**குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்**
**குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்**
**குருடும் குருடும் குழிவிழுமாறே.**

மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களும் தூய்மையுடன் செயற்பட்டாலே செய்கின்ற காரியங்கள் எல்லாம் சித்தியாகும்.

"திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் நீ அருள்வாய்" எனத் தாயுமான சுவாமிகள் இதனைக் குறிப்பிடுகின்றார். சொல்லும், செயலும், நினைப்பும் ஒன்றாக இருந்தால்த்தான் இறையருளை உணரமுடியும். வாய் ஏதோ ஒன்றைச் சொல்ல, மனம் வேறொன்றை எண்ண, நீ பிறிதொன்றைச் செய்யாதே. திரிகரணங்களும் தூய்மையாக இருந்தால் நீ சிவாக்கினியைப் பெற்றவன் ஆவாய். சிவ ஒளியைப் பெற்றுத் தெளிந்தபின் என் சொல் பித்தனின் சொல் என்று யாருமே கூறமாட்டார்.

**வாய் ஒன்று சொல்லி மனம் ஒன்று சிந்தித்து**
**நீ ஒன்று செய்யில் உறுதி நெடுந்ததாய்**
**நீ யென்றிங் குன்னைத் தெளிவன் தெளிந்தபின்**
**பேயென்றிங் கென்னைப் பிறர் தெளிகிலாரே.**

நீதி தவறாது நாட்டை ஆளவேண்டியது நாட்டை ஆளும் அரசனின் கடமை. நாட்டு மக்களைச் சரியான முறையில் நீதி தவறாமல் ஆட்சி செய்யும் அரசனை மக்கள் அனைவரும் கடவுளாகப் போற்றி வணங்குவார்கள் என்பதை

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப்படும்.**

எனத் தெய்வத் தமிழாகிய திருக்குறள் கூறுகிறது. எப்பொழுது அறம் அழிந்து மறம் மேலெழுகின்றதோ அப்பொழுது நல்லோரைக் காக்கவும் தீயோரை அழிக்கவும் நான் யுகம் யுகந்தோறும் திருஅவதாரம் செய்கிறேன் எனக் கிருஷ்ண பகவான் பகவத்கீதையிலே அவதாரக் கோட்பாட்டினை விளக்குகின்றார்.

பஞ்சமா பாதகங்களைத் துணிந்து செய்பவர்களை நாட்டில் தலைதூக்க விடாமல் செய்யவேண்டிய பொறுப்பு நாட்டினை ஆளும் தலைவனுடையது. இத்தகையோரைத் தண்டிக்க அரசன் தவறுவானாக இருந்தால் நாட்டிலே பஞ்சம், பட்டினி தலைவிரித்தாடி நாடானது வறுமைக்குள் சிக்கி முற்றிலும் அழிந்துவிடும்.

**பஞ்சத் துரோகத்திப் பாதகர் தம்மை**
**அஞ்சச் சமயத்தோர் வேந்தனருந்தண்டம்**
**விஞ்சச் செய்திப்புவி வேறு விடாவிடில்**
**பஞ்சத் துளாய் புவி முற்றிலும் பாழாகுமே.**

பக்குவம் உடையவனுக்கே குருவின் உபதேசம் கிடைக்கும். பக்குவம் அற்றவனாகிய அபக்குவன் ஒருநாளும் குருவின் உபதேசத்தைப் பெறமுடியாது. பக்குவம் இல்லாதவன் தன்னைப் பீடித்திருக்கும் மலங்களாகிய ஆணவம், கன்மம்,

மாயை, மாயேயம், திரோதாயி ஆகிய ஐந்து மலங்களையும் பற்றி அறியமாட்டான். அவனுடைய வாயில் இருந்து வரும் வார்த்தைகளில் உண்மை வராது. பொய் கலந்தே பேசுவான். பிறவிநோயை நீக்குவதற்குரிய வழியை என்றுமே அறியமாட்டான். “பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே” என்ற அப்பர் பெருமான் அருளிய வாக்கிற்கு அமையவே தனது வாழ்நாளைக் கழிப்பான். தில்லைக் கூத்தனின் திருவடிகளைப் பற்றிப்பிடித்து அல்லல் பிறவி அறுக்கும் வழி தெரியாமல் அலைந்து திரிவான். அகத்தை மாசுபடுத்தும் அறுவகைப் பகைகளாகிய காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பவற்றைப் பற்றியும் அறியமாட்டான். இத்தகைய இயல்புடையவர்களை மாணவர்களாக ஏற்கக் கூடாது என்பதைப் பின்வரும் பாடல் விளக்குகிறது.

**மன்னும் மலம் ஐந்தும் மாற்றும் வகை ஓரான்**
**துன்னிய காமாதி தோயும் தொழில் நீங்கான்**
**பின்னிய பொய்யன் பிறப்பு, இறப்பு அஞ்சாதான்**
**அன்னியனாவான் அசற் சீடனாமே**

தகுதி உடைய பக்குவன் குருவின் அறிவுரைப்படியே என்றும் நடப்பான். இறைவனிடம் முற்றிலும் சரணாகதி அடைதல் அல்லது அடைக்கலம் புகுதலே பிரபக்தி நெறி ஆகும்.

பாண்டி நாட்டின் முதல் அமைச்சராகத் தென்னவன் பிரமராயன் என்ற பட்டத்தோடு திகழ்ந்த மணிவாசகரைத் திருப்பெருந்துறையில் பரமசிவன் குருவேடம் தாங்கி ஆட்கொண்டார். அமைச்சருக்குரிய மிடுக்கான கோலத்தோடு சென்ற மணிவாசகனார் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற பின்பு கௌபீன உடையும், திருமேனி நிறைய திருநீறு பூசிய கோலமும், மயிர் விரிக்கப்பெற்ற சிரசும், ஆனந்தக் கண்ணீர் பொழியும் கண்களும் உடையவராக மாறிக் குருநாதரிடம் தன்னைப் பூரணமாக ஒப்புவித்த நிலையிற் காட்சி தந்தார். மணிவாசகரைப் புடம் போட்ட தங்கமாக மாற்றவிரும்பிய பரமசிவன் அவருக்குப் பல சோதனைகளைத் தந்தார். பாண்டிய அரசனால் மணிவாசகர் பல துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டார். தீயிட்டு உருக்குமளவு பொன் ஒளி வீசுவது போன்று இன்னல்கள் அதிகரிக்கும் அளவிற்கு பக்தியானது தீவிர பக்தியாக மணிவாசகரிடம் மாற்றம்பெற்றது. சோதனைகளும் வேதனைகளும் தொடர்ச்சியாக ஏற்பட்டபொழுது மணிவாசகனார் இறைவனையே நொந்து பாடினார். அன்புப் பசையால் உரிமை உணர்வுடன் இறைவனைத் துதிக்கும் பாடல்களைக் குழைத்த பத்திலே காணலாம். திருப்பெருந்துறையில் என்னுடைய உடல், பொருள், ஆவி மூன்றையும் ஒன்றுசேர ஆட்கொண்ட பின்பு எனக்கு இடையூறு செய்யலாமா? பாதங்களைப் பற்றிப் பிடித்து வணங்கும் அடியவனை சோதனைக்கு உட்படுத்தலாமா? என உரிமையோடு இறைவனை வேண்டுவதைக் குழைத்த பத்திலே காணலாம்.

**அன்றே என்தன் ஆவியும்**
**உடலும் உடைமை எல்லாமும்**
**குன்றே அனையாய் என்னை**
**ஆட்கொண்டபோதே கொண்டிலையோ**

இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ
என்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே

இறைவனுடைய திருவருள் துணை இருந்தால்த்தான் நல்ல குருநாதர் கிடைப்பார். நல்ல குருவை அடைந்து அவரிடம் உன் உடைமையாய் உள்ள பொருளையும், உனது உடலையும், உயிரையும் காணிக்கையாக வழங்குதல் வேண்டும். குரு காட்டும் வழியில் நின்று சரியாகச் செயற்பட்டால் ஆன்மாவில் தெளிவுநிலை ஏற்பட்டுச் சிவபதம் தானாகவே கிடைத்துவிடும் என்கிறார் திருமூலர்

கொள்ளினு நல்ல குருவினைக் கொள்க
உள்ள பொருளுடல் ஆவியுடனீக
எள்ளத் தனையுமிடை விடாதே நின்று
தெள்ளியறியச் சிவபதந்தானே.

(தொடரும்...



சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்ற வைகாசிப் பெருவிழாவின்போது திருமதி ஜெயராமக்குருக்கள் யோகமலர் அவர்களுக்குரிய நான்கு சக்கரத் தள்ளுவண்டி கையளிக்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.

ஆற்றை பார்த்தால் அறிவு, இறங்கி நீந்தினால் அனுபவம்.

உ

(தொடர்ச்சி...

# பெருவாயின் முள்ளியாரின் ஆசாரக்கோவை

## 12. பெரியோர் பெருங்குணம்

**தலையுரைத்த எண்ணெயால் எவ்வுறுப்பும் தீண்டார்**
**பிறர்உடுத்த மாசுணியும் தீண்டார் செருப்புக்**
**குறையெனினும் கொள்ளார் இரந்து.**

எண்ணெய் தேய்த்த தலையுடன் பிற உறுப்புகளைத் தீண்டமாட்டார்கள். மற்றவர்கள் உடுத்திய அழுக்கு ஆடையைத் தாம் அணியமாட்டார்கள். எவ்வளவுதான் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாலும், மற்றவர் செருப்பைத் தாம் அணியமாட்டார்கள். இவையெல்லாம் பெரியோர் பெருங்குணங்கள்.

மாசுணி- அழுக்கு ஆடை.

## 13.எண்ணெய் தேய்த்துக்கொண்டு....

**நீருள் நிழல் புரிந்து நோக்கார் நிலம் இராக்**
**கீறார் இரா மரமும் சேரார் இடர் எனினும்**
**நீர்தொடாது எண்ணெய் உரையார் உரைத்தபின்**
**நீர் தொடார் நோக்கார் புலை.**

நீருக்குள் தம்முடைய நிழலைப் பார்க்க விரும்பமாட்டார்கள். தரையைத் தம் காலால் கீறமாட்டார்கள். இரவில் மரத்தடியில் ஒதுங்கமாட்டார்கள். இக்கட்டான சமயத்திலும் நீரைத் தொடாது எண்ணெய் தேய்த்துக் கொள்ளமாட்டார்கள். (எண்ணெய் தேய்த்துக் கொள்ளக்கூடாத நாட்களில், எண்ணெய் தேய்த்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் வந்தால்; நீரைத் தொட்டுத் தெளித்துக்கொண்டு எண்ணெய் தேய்த்துக் கொள்ளலாம்) எண்ணெய் தேய்த்துக்கொண்டபின் குளிக்காமல் கீழ் இனத்தவரைக் கண்ணால் காணவும் கூடாது.

உரையார்- பூசார்; புலை- கீழ்மக்கள்.

## 14. நீராடும்போது...!

**நீராடும் போழ்தில் நெறிப்பட்டார் எஞ்ஞான்றும்**
**நீந்தார் உமியார் திளையார் விளையாடார்**
**காய்ந்தது எனினும் தலை ஒழிந்து ஆடாரே**
**ஆய்ந்த அறிவினவர்.**

ஆறு, குளம் போன்ற நீர் நிலைகளில் குளிக்கும்போது, நீதிநெறி உணர்ந்த பெரியோர் ஒருபோதும் நீந்திக்களிக்கமாட்டார்கள். நீரை அள்ளி வாய் கொப்பளித்து, அந்நீரிலேயே உமிழமாட்டார்கள். அமுங்கிக் கிடக்கமாட்டார்கள். முக்குளித்து விளையாட மாட்டார்கள். உடல் காய்ந்தாலும் குளிக்கவேண்டி வந்துவிட்டால் தலையோடு முழுகாமல்

உடல்மட்டும் நனையக் குளிக்கமாட்டார்கள். இவை எல்லாம் பலநூல் ஆய்ந்தறிந்த பெரியோர்கள் பேணிக்காக்கின்ற நடைமுறைகளாகும்.

நெறி- நீதி நெறி; எஞ்ஞான்றும்- எக்காலத்தும்; உமியார்- உமிழார்; ஆய்ந்து- ஆராய்ந்து.

### 15. சுற்றுச் சூழல் போற்றுக

**ஐம்பூதம் பார்ப்பார் பசு திங்கள் ஞாயிறு**
**தம்பூதம் எண்ணாது இகழ்வானேல் தம்மெய்க் கண்**
**ஐம்பூதம் அன்றே கெடும்.**

ஐம்பெரும் பூதங்களாகிய நீர், நெருப்பு, நிலம், காற்று, ஆகாயம் இவற்றையும்; பார்ப்பனர், பசு, நிலவு, சூரியன் ஆகியவற்றையும் தன்னுடைய உடலைப்போல எண்ணிப் போற்றாமல் இகழ்ந்து பேசுவானாகில், அவன் உடலில் வாழும் ஐந்து பூதத்துக்கு உரிய தெய்வங்களும் அன்றே அவனை விட்டுப் போய்விடும். அவன் கெடுவான். நீரையும், நிலத்தையும், மண்ணையும், விண்ணையும் மாசுபடுத்தும் இன்றைய மனிதர்களுக்கு, அவற்றின் தூய்மை காக்கவேண்டிய அவசியத்தை, அன்றே பாடி விட்டார் புலவர்.

தம்பூதம்- தம் உடல்; மெய்- உடல்.

### 16. போற்றித் தொழுக பெரியோரை

**அரசன் உவாத்தியாயன் தாய் தந்தை தம்முன்**
**நிகரில் குரவர் இவர் இவரைத்**
**தேவரைப் போலத் தொழுது எழுக என்பதே**
**யாவரும் கண்ட நெறி.**

மன்னன், கற்பித்த ஆசான், பெற்ற தாய், தந்தை, உடன்பிறந்த மூத்தோர் ஆகியோர்; தமக்கு நிகரில்லாத பெரியோர் ஆவார்கள். இவர்களைக் கடவுளைப் போலப் போற்றித் தொழவேண்டும் என்பதே நம் முன்னோர் எல்லோரும் மொழிந்த நல்வழியாகும்.

தம்முன்- தம்முன் பிறந்தோர்; குரவர்- பெரியோர்.

### 17. கற்றவர் போற்றும் கொள்கை இவை

**குரவர் உரை இகந்து செய்யார் விரதம்**
**குறை உடையார்தீர மறவார் நிறைஉவா**
**மெல்கோலும் தின்னார் மரம் குறையார் என்பதே**
**நல்லறிவாளர் துணிபு.**

அரசன், ஆசிரியன், தாய், தந்தை, அண்ணன், அக்காள் ஆகிய பெரியோர்கள் சொல்லை மீறமாட்டார்கள். நோன்பினை இடையிலே நிறுத்தமாட்டார்கள். முழுநிலாக் காலத்தே பல் துலக்கிடவோ, பல்குச்சியை மென்றிடவோ செய்யார். பௌர்ணமி நாளில் மரங்களை வெட்டமாட்டார். இவை எல்லாம் கற்றறிந்த பெரியோர் கடைப்பிடிக்கும் கொள்கைகளாகும்.

இகந்து- மீறி; நிறைஉவா- முழுநிலாக் காலம்; குறையார்- வெட்டார். (தொடரும்...

உ

# வேண்டுதல்கள்

## திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்

இறைவனை இறைவனாகக் கருதிப் பக்தி செய்யாமல் தான் விரும்பும் ஓர் உறவாகக் கருதி பக்தன் அன்பு செலுத்துவது பற்றி ஏற்கனவே பார்த்தோம். ஆண்டாள் கண்ணனைக் கணவனாக அடைய விரும்பி வேண்டிநின்றதையுங் கண்டோம்.

இறைவனைப் பெரும்பாலானவர்கள் அம்மையாகவோ அன்றி அப்பனாகவோ அல்லது அம்மையப்பனாகவோ கருதி வழிபடுவதைக் காணலாம். ஆனால் சிலர் தாம் தாயாகவோ தந்தையாகவோவிருந்து இறைவனைக் குழந்தையாகக் கண்டு வழிபட்டனர். பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் இறைவன் குழந்தையாகக் கருதப் படுவதைக் காணலாம்.

இவ்வாறு கண்ணனைக் குழந்தையாகக் கண்டு வழிபட்டோரில் பெரியாழ்வாரும் ஒருவர். கண்ணன் பிறந்து வளரும் ஒவ்வொரு பருவத்தையும், அன்னையாக அருகிருந்து பார்த்ததுபோன்று அற்புதமாகப் பாடியிருக்கிறார். உதாரணத்திற்கு கண்ணனுக்குத் தாலேலோ பாடுவதைக் கூறலாம்.

**மாணிக்கங்கட்டி வயிரமிடைகட்டி,**
**ஆணிப்பொன்னாற்செய்த வண்ணச்சிறு தொட்டில்,**
**பேணியுனக்குப் பிரமன்விடுதந்தான்**
**மாணிக்கக்குறளனே தாலேலோ**
**வையமளந்தானே தாலேலோ**

எனக் கண்ணனைத் தாலாட்டி மகிழ்கிறார். அப்படிப் பாடுகையில் அவன் உறங்கும் தொட்டிலை எவ்வளவு அழகாகக் கற்பனை செய்திருக்கிறார் பாருங்கள். படைத்தற் கடவுளாகிய பிரம்மன் தொட்டில் செய்து கொடுத்திருக்கிறான். அதுவும் சும்மா ஒரு தொட்டில் செய்பவன் கொடுப்பது போன்று தரவில்லை. பேணி உனக்குத் தந்தான். அது சாதாரண தொட்டிலல்ல. ஆணிப்பொன்னாற் செய்து மாணிக்கமும் வயிரமும் இடையிடையே கட்டியமைத்த வண்ணச் சிறுதொட்டில்.

இதேபோன்று கண்ணன் வளரும் ஒவ்வொரு பருவத்தையும் அவர் வர்ணிக்கும்போது அவனது தாயாகவே மாறிவிடுகிறார். எல்லாப் பாடல்களையும் இங்கே தந்துவிட முடியாது. மற்றுமொரு பாடலை மட்டும் பார்ப்போம். வளர்ந்து தளர்நடையிட்ட கண்ணன் வந்து அன்னையின் முதுகைக் கட்டியணைப்பதைப் பத்துப் பாடல்களிலே பெரியாழ்வார் வர்ணிக்கிறார். அதிலே முதலாவது பாடல் இதுவாகும்.

**வட்டுநடுவே வளர்கின்றன, மாணிக்க**
**மொட்டுநுனையில் முளைக்கின்ற முத்தேபோல்**
**சொட்டுச் சொட்டெனத் துளிக்கத்துளிக்க, என்**
**குட்டன் வந்தென்னைப் புறம்புல்குவான்**
**கோவிந்தனென்னைப் புறம்புல்குவான்.**

எனப்பாடும்போது அந்தக் குட்டிக் கண்ணன் குளிர்முத்தாய் அணைக்கும் இதம் எம் மனங்களையும் தொடுகிறது. ஆசையுடன் குட்டன் என அடிக்கடி கண்ணனை அழைப்பார் பெரியாழ்வார். கண்ணனைக் குழந்தையாக மட்டும் அவர் காணவில்லை. அவன் வளர்ந்து சிறுவனாகி, இளைஞனாகி நிற்பதையும் பார்த்து மகிழ்கிறார். அத்துடன் சிலவேளை கவலைப்படுவதையும் காணலாம்.

வண்ணக்குழல் மாதர் வந்து கண்ணனைப்பற்றி அவர் தூற்றினர். அவன் மனைகள் தோறும் திரியாமல், பெண்களுடன் ஆயர்பாடியில் சிற்றில் சிதைத்தெங்கும் தீமை செய்து திரியாமல், பொன்மணி மேனியெங்கும் புழுதியாடித் திரியாமல், ஆநிரை மேய்ப்பதற்காய் கன்றின் பின்னே கண்ணனை அனுப்பிவிட்டு அவன் பாவமெனப் பத்துப் பாடல்களிலே கவலைப்படுகிறார்.

**வள்ளி நுடங்கிடை மாதர்வந்தலர் தூற்றிட**
**துள்ளிவிளையாடித் தோழரோடு திரியாமே**
**கள்ளியுணங்கு வெங்கானத ரிடைக் கன்றின் பின்**
**புள்ளின் தலைவனைப் போக்கினேன் எல்லே பாவமே**

என்பது அவற்றுள் ஒரு பாடல். வெங்கானகத்தில் கழலடி நோகக் கன்றின் பின் போக்கியதற்காக அவன் பாவமெனப் பரிதவிக்கிறார்.

நாம் பிள்ளைகளுக்குச் சோதிடர் கூறும் முதல் எழுத்து உள்ளதாகவும் எண் சோதிடப்படியும் எனப் பலவாறு பார்த்துப் பெயர் சூட்டுகிறோம். அந்தப் பெயர்கள் படும்பாடும், படுத்தும் பாடும் கூறத்தொடங்கினால் முடிவுறாது. பெயரின் கருத்தைப்பற்றி நாம் கருத்திலெடுப்பதே இல்லை. பெரியாழ்வார் என்ன கூறுகிறார் தெரியுமா? "காசுங்கறையுடை" என ஆரம்பிக்கும் திருமொழியின் பத்துப் பாடல்களிலும் பிள்ளைகளுக்கு நாராயணனின் பெயரையிடுமாறு அறிவுறுத்துகிறார். அப்படிச் செய்தால் அன்னை பிள்ளையை அழைக்குந்தோறும் நாராயணனின் நாமத்தை உச்சரிப்பதால் அவள் நரகத்திற்குப் போகமாட்டாள் என்கிறார். இந்தத் திருமொழிப் பாடல்கள் எல்லாவற்றின் இறுதியடியின் முடிவு "நாரணன் தம் மன்னை நரகம் புகாள்" எனவுள்ளது. அப்படியானால் கண்ணனைத் தம் குழந்தையாகவே காணும் பெரியாழ்வாருக்கு வைகுண்டப் பிராப்தி நிச்சயம் என்பதும் இதனின்றும் தெளிவாகிறதல்லவா? அந்த எண்ணம் அவருக்கிருந்திருக்கலாம்?

எல்லோருமே "நோய் வரக்கூடாது, கூற்றுவன் வரும்போது காப்பாற்று" என இறைவனை வேண்டுவது இயல்புதான். அத்தகைய வேண்டுதலைப் பெரியாழ்வார் செய்யும்போது வேறோரெண்ணமும் எழுகின்றது.

பெற்றோர் பிள்ளையைப் பெற்று வளர்க்கும்போது எதையும் அவனிடம் அல்லது அவளிடம் எதிர்பார்ப்பதில்லை. ஆனால் இறுதிக்காலத்தில் நோய், மரணம் என்பவை வரும்போது பிள்ளைகள் தம்மைக் கவனிக்கவேண்டுமென எதிர்பார்ப்பார்கள். அப்படித்தான் பெரியாழ்வாரும் தன் பிள்ளையென்ற உரிமையோடு வேண்டி இருக்கலாம். அவரது இத்தகைய வேண்டுதல் ஒன்றைப் பார்ப்போம்.

**நானேது முன்மாய மொன்றறியேன்**
**நமன்றமர் பற்றி நலிந்திட்டு – இந்த**
**ஊனே புகேரியன்று மோதும் போதங்கேதும்**
**நானுன்னை நினைக்க மாட்டேன்**

*திறமையும் அவசியமும் ஒன்றுக்கொன்று பக்கத்தில் வாழ்கின்றன.*

வானே வானவர் தங்களீசா
மதுரைப் பிறந்த மாமாயனே– என்
ஆனாய் நீயென்னைக் காக்கவேண்டும்
அரங்கத் தரவணைப் பள்ளியானே

இதேபோன்ற பல வேண்டுதல்களை அவர் செய்துள்ளார். கூற்றுவன் குறுகும்போது வந்து காக்கவேண்டுமென்பது அவரது முக்கிய வேண்டுதலாகவுள்ளது. உரிமையோடு அவர் கேட்கலாந்தானே.

## காணாத் தெய்வத்தின் கலந்துயரும் வேலேயற்புதம்

சோதி மணித்திரள் சொர்ணபூமியாம் தொண்டைமானாற்றில் பாதாளமேழினும் படர்ந்து மிளிரும் கோலாகலக் குமரன் குழந்தை வடிவேலன் குடிகொண்ட சந்நிதித் தலமாம் சித்தர்கள் போற்றிய சின்னக்கதிர்காமம் வற்றாத ஜீவநதி வளங்கொண்டு வாரியள்ளும் முத்துக்குவியல்கள்போல் தினம்முயன்று முழங்கும் ஞான ஒளிச்சுடர் களிக்கும் களனிவளர் பதியிலங்கும் பழமுதிர்சோலையோவென பன்னாகம் பாடிப் பசிதீர்க்கும் மாவருளே நிறைதுலங்கும் சந்நிதியான் ஆச்சிரமமேயாம்.

மானிடவாழ்வு மகிழ்ச்சிகரமான தெய்வவாழ்வு நாம் மானிடப் பிறவியை எடுத்தல் அரிது. அப்படிப் பிறப்புற்றிருந்தாலும் இறைவனைத் தியானித்தலரிது; அப்படிப் பிறந்த நாம் என்னசெய்ய வேண்டுமெனச் சிந்தித்தல் வேண்டும். சிந்தித்து உணர்வோமேயானால் இளமையென்ற குழந்தைப்பருவம் முதுமை என்ற கிழப்பருவம் எம்முன்னே வருகின்றது. இதைக் கொண்டே ஞானவேலனும் பாலவடிவமாகிப் பருவக்குமர வடிவேலாகி பலப்பிரமை நீங்கிய ஆண்டியாகி முதுபெரும் கிழப் பருவ விருத்தனாகி தியாக சொரூபியாகி மலபந்தங்களை நீக்கி ஞான உபாதத்தைக் கொடுத்து எம்மை ஆட்படுத்தி அருள் கொள்ளுகின்ற அருள்ஞான வாக்கினைப் புராண படன இதிகாசங்களில் அறிந்தும் அறியாதவர்போல் அல்லற்பட்டு அவதியுறுகின்றோம்.

காலத்தால் அறியாத கடவுளருளினைக் காணாது துடித்துப் பேதைமனம் புன்மைசேர் வாழ்வையே விரும்புகிறது. ஒருநாள் வாழ்வில் அரைநாள் இரவு அதிலும் நோய்கள் பற்பல. சிலகாலம் இப்படிக் கழிந்தால் இறைவனைத் தியானிக்கக்கூடிய காலம் எமக்கு எப்படி மிஞ்சப்போகின்றது. இதற்குள்ளேயும் குறுகிய காலத்தில்த்தான் தெய்வதரிசனம் கைகூடும். அவ்வேளையிலாவது நாம் இறைவனை வணங்கி ஆன்மா மானிடப் பிறவியெடுத்ததை வியந்து பயனடையமுடியும் என்ற நம்பிக்கையை மகா தத்துவ ஞானத்தை, ஆன்ம ஈடேற்றத்திற்கு வித்திட்ட மகா பிரபந்தத்தை இந்தப் பூமியிலே கிடைத்ததைச் சிறந்து கூறி அருள்வாசகம் பாடியுள்ளார் மணிவாசகப்பெருமான். "அடியார்க்கு அடியாராயிருத்தல் ஆன்ம ஈடேற்றத்திற்கு அளப்பரிய தொண்டேயாம்" என உருக்கும் திருவாசகத்தில் உண்மைத் தொண்டினை உயர்த்திக் கூறுவது சிறப்பாக அமைந்துள்ளது.

இதுபோன்று எமது ஆச்சிரம மோகன் சுவாமிகளினது தொண்டுகளும் அளப்பரியது. "கணக்குவழக்குமில்லை ஒரு எழுத்துத்துண்டுமில்லை. நான் நினைக்கிறேன் என்முன்னால் முருகன் நின்று செய்தருளுகின்றார்" எனக் கூறுவார்கள். இவைகள் யாவும் தெய்வச்செயல் தானாகவே வரும் யாரும் நினைத்துச் செய்வதில்லை. செய்தும் முடிக்கேலாது. இவைகள் யாவும் எம்பெருமான் உள்நின்று செய்யும் தீர்க்கதரிசனம் திருவிளையாடலேயாகும், ஆற்றங்கரையானின் அருளேயன்றி வேறொன்றுமில்லை. அவனருளாலே அவன்தாழ் வணங்கித் துதிப்போம்.

*திரு க. தெய்வேந்திரம் A.I.J.P. அவர்கள்*

**பொதுவாக தலைசிறந்த அறிவு என்னவென்றால் உறுதியாகத் தீர்மானித்தலே.**

உ

# பணி

## திரு S.S. ரஜீந்திரன் அவர்கள்

உலகில் பிறந்த ஜீவராசிகள் எல்லாவற்றிற்கும் பணிகள் உள்ளன. அப் பணிகளை எல்லா ஜீவராசிகளையும்விட மனிதராகிய நாம் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் நாம் ஆறு அறிவு படைத்தவர்கள். பணி என்பது கடமை, சேவை எனும் பதங்களாலும் குறிப்பிடப் படுகிறது. கடமை எனும் பதத்தை நம்மில் பலர் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். ஏனெனில் ஒரு வேலை செய்பவரைப் பார்த்து "கடமைக்குச் செய்யாதே சிறப் பாகச் செய்" என்று கூறுவார்கள். அது பிழையான கருத்தாகும். "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்பர் ஆன் றோர். ஆகவே எமது கடமைகளைச் சிறப் பாகச் செய்தாலே அவை யாவும் இறை வனுக்குச் செய்யும் பணிக்கு ஒப்பாகும் என்று ஔவையார் மொழிந்தார். பெரிது எதுவென ஔவையிடம் முருகப்பெருமான் வினாவியபோது சிவனடியார்களின் உள் ளமே பெரிது என்று பகன்றார். ஆகவே சிவனடியார்களுக்குச் செய்யும் தொண்டே மிகச்சிறந்ததாகும்.

### *எமது கடமைகள் என்ன?*

1. நாம் தாய், தந்தையருக்குச் சிறந்த சேய்களாக இருந்து அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டும்.
2. எமது குருவிற்கு செய்யவேண்டிய கடமைகளைச் செய்யவேண்டும்.
3. எமது துணைவா் அல்லது துணைவிக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டும்.
4. எமது சேய்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யவேண்டும்.
5. எம்மைச் சுற்றியுள்ளவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யவேண்டும்.
6. எமது வேலைத்தலங்களில் எமக்குத் தரப்பட்ட பணிகளைச் செவ்வனே செய்ய வேண்டும்.
7. எமக்கு உதவும் பிராணிகளுக்கும் எமது நாளாந்த கடமைகளைச் செய்யவேண்டும்.
8. சிவனடியார்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் சிறப்பாகச் செய்யவேண்டும்.
9. ஆலயங்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் சிரத்தையுடன் செய்யவேண்டும்.
10. இறைவனுக்குச் செய்யவேண்டிய பணிகளை இதய சுத்தியுடன் செய்யவேண்டும்.
11. எமது ஊருக்கு, நகருக்கு, நாட்டிற்கு, உலகத்திற்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யவேண்டும்.

என விரிந்து தொடர்ந்து செல்கின்றது.

எம்மில் யார் எமது கடமைகளைச் சரிவரச் செய்கின்றோம்? எமது கடமைகளைச் சரிவரச் செய்தலே ஞானம் பெறுவதற்கு இலகுவான வழியாகும். ஞானம், கல்வி அறிவால் வருவதல்ல. ஒரு பசுவிற்கு வைக்கோல், உமி, தவிடு, களைநீர், கஞ்சி ஆகிய எமக்குத் தேவையற்ற கழிவுப் பொருட்களைக் கொடுக்கிறோம். ஆனால் பசுவோ எமக்கு மிக உன்னதமான பொருட்களாகிய பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகியவற்றைத் தருகிறது. அந்த ஐந்து அறிவு படைத்த பசு தனது கடமைகளைச் சரியாகச் செய்கின்றது. நாம் ஏன் செய்யக்கூடாது? "ஆறு அறிவு படைத்த ஜீவன்களுக்கு இது சமர்ப்பணம்"

கடமைகள் எவ்வாறு தோன்றுகிறது?

**நன்றிக்கடன்:**

வள்ளுவர் பெருமான் நன்றி பாராட்டுவதை,

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்**
**உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"**

எனும் குறளின்மூலம் தெளிவுபடுத்தினார்.

நாம் பெற்ற நன்மைகளுக்குப் பிரதி உபகாரம் செய்வதே நன்றிக் கடனாகும். அதுவே கடமை ஆகின்றது. நாம் சிறு குழந்தையாய் இருக்கும்போது எமது தாய், தந்தையர், உணவு, உடை, உறையுள் என்பவற்றைத் தந்தார்கள். அவர்கள் மூப்படையும்போது நாமும் அவர்களுக்கு உணவு, உடை, உறையுள் என்பவற்றை வழங்கவேண்டும் அல்லவோ. நாம் யாரிடமெல்லாம் நன்மை பெற்றோமோ அவர்களுக்குச் செய்யவேண்டிய பிரதி உபகாரங்களே கடமைகளாக எமக்குச் சேர்கின்றன. இதற்கு ஒரு சிறந்த சான்றுக் கதையாக நாரதரின் அகந்தை அழிந்த சம்பவம் முன்னே நிற்கிறது.

சிறந்த பக்தன்:- ஒருநாள் திரிலோக சஞ்சாரியான நாரத முனிவர் வைகுந்தம் சென்றார். செல்லும்போது அவர் அகந்தையுடன் சென்றார். என்ன அகந்தை? உலகில் சிறந்த நாராயண பக்தன் தான் என்பதுதான் அது. அவர் தனது சந்தேகத்தை மகாவிஷ்ணுவிடமே கேட்டார். வைகுந்தவாசன் அதற்கு விடைபகராமல் நாரதமுனிக்கு ஒரு வேலை கொடுத்தார். ஒரு சிறிய பாத்திரம் நிறைய நெய் ஊற்றி அப்பாத்திரத்தில் உள்ள நெய்யில் ஒரு துளியேனும் சிந்தாது உலகைச் சுற்றிவருமாறு பணித்தார். நாரதரும் உடனே அந்நெய்ப் பாத்திரத்துடன் உலகைச் சுற்றி வந்தார். ஒருதுளி நெய்கூடச் சிந்தவில்லை. நாரதருக்கு விஷ்ணு பகவான் இட்ட கட்டளையைச் சிறப்பாக நிறைவேற்றி விட்டோம் என்று மேலும் மமதை அதிகரித்தது. பகவான் முனிவரைக் கேட்டார் "இன்று எத்தனை தடவைகள் எம்மை நினைத்தாய்?" அதற்கு நாரதமுனிவர் தாங்கள் இட்ட கட்டளையை நிறைவேற்றுவதில் முழுக்கவனத்தையும் செலுத்தியதால் தங்களை ஒருமுறை கூட நினைக்கவில்லை என்றார். மகாவிஷ்ணு ஒன்றும் பேசாமல் முனிவருக்கு மேலும் ஒரு கட்டளை இட்டார்.

"நீ பூலோகத்தில் உள்ள ஒரு கிராமத்தில் வசிக்கும் ஏழை உழவனின்

*முட்டாளின் அகராதியில்த்தான் இயலாது என்ற சொல்லைக் காணமுடியும்.*

வீட்டிற்குச் சென்று அவனின் ஒருநாள் பணிகள் என்ன என்பதனைப் பார்த்து வாரும்" என்றார்.

விடியற்காலை அவ் உழவனின் வீட்டிற்கு நாரதமுனிவர் சென்று அவன் நடவடிக்கைகளைப் பார்க்கத் தொடங்கினார்.

உழவன் அதிகாலை நித்திரை விட்டெழுந்தான். எழும்போது "ஓம் நாராயணாய" என்று இறைவனைப் பிரார்த்தித்தான். ஆகவே உலகில் தன்னைப் படைத்த இறைவனுக்குச் செய்யவேண்டிய பணியைச் செய்தான். பின்பு எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு சூரிய நமஸ்காரம் செய்தான். ஆகவே அவன் உலகையும், தன் உழவுத் தொழிலையும் வாழவைக்கும் சூரியனுக்குத் தனது பணியைச் செய்தான்.

அதன்பின்பு தன் தாய், தந்தையருக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தான். அத்துடன் மனைவி, பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தான்.

இவை முடிந்தவுடன் வயலுக்குச் சென்றான். அங்கு தனக்கு உதவும் விலங்குகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தான். அதன்பின்பு உணவருந்தும்போது "ஓம் நாராயணாய" என்று கூறித் தனக்கு உணவு தந்த கடவுளுக்குச் செய்யவேண்டிய பணிகளைச் செய்தான்.

வேலைகள் யாவும் முடிவடைந்து மீண்டும் உறங்கச் செல்வதற்கு முன், தான் அன்று பெற்ற எல்லா நன்மைகளுக்காக "ஓம் நாராயணாய" என்று இறைவனுக்குத் தனது நன்றிகளைக்கூறி நித்திரை செய்தான்.

இவற்றை எல்லாம் பார்த்த நாரத முனிவரின் அகந்தை உடனே காற்றில் பறந்தது. தான் இறைவன் தந்த ஒரு பணியை மட்டும் செய்தபோது இறைவனை நினைக்கிறேன். ஏழை உழவனோ தனக்கு உரிய எல்லாக் கடமைகளையும் சிறப்பாகச் செய்கிறானே இவனே சிறந்த தெய்வ பக்தன் என்று மகாவிஷ்ணுவிடம் கூறினார். ஆகவே எமது ஒரு கடமையை மட்டும் சரியாகச் செய்தால் மட்டும் இறை அருள் கைகூடாது. ஒரு மனிதனுக்கு இருக்கவேண்டிய அங்கங்கள் எல்லாம் சரியாக இருந்தால்த்தானே சிறப்பு. அது போல் எமது கடமைகள் யாவற்றையும் செய்தாலே நாம் சிறந்தவராவோம்.

பணி செய்வதைவிட சிறந்த வழிபாடு எதுவும் இல்லை என்பதனை இராம அவதாரமும் மிகச் சிறப்பாக உணர்த்துகிறது.

விஷ்ணு பெருமான் இராம பிரானாக மனித அவதாரம் எடுத்தது ஏன் என்று கேட்டால், இராவணன் மனிதனைத் தவிர வேறு எவராலும் வெல்லப்பட மாட்டான் என வரம் பெற்றிருந்தான் என்று காவியம் கூறுகிறது. ஆனால் அக்காவியத்தின் உட்பொருள் இறைவனை அடையும் வழிமுறைகளை மனித குலத்திற்கு உணர்த்தவே இராம அவதாரம் நிகழ்ந்தது.

விஷ்ணு பெருமானும் அவருடைய அம்சங்களில் இருந்து தோன்றியவர்களே இராமன், பரதன், இலக்குவணன், சத்துருக்கன் ஆவார்கள். இவர்கள் நால்வரும் இறைவனை அடையும் நான்கு வழிமுறைகளை எமக்கு வாழ்ந்து காட்டினார்.

உயர்ந்தவர்களின் எண்ணம், சொல், செயல் எல்லாமே சிறந்து விளங்கும்.

1. இராமபிரான் தான் செய்ய வேண்டிய கடமைகளை அதாவது பணிகளைச் சிறப்புறச் செய்தார். இது இறைவனை அடைய மிகச் சிறந்த சுலபமான வழி ஆகும்.
2. இலக்குவன் கடமையைச் செய்கின்ற தனது தமையனுக்கு பணிவிடைகள் செய்தான். இறைவனை அடையக்கூடிய இரண்டாவது வழி ஆகும்.
3. பரதன் இராமபிரானாகிய இறைவனின் பாதுகைகள் சிரசின்மேல் வைத்து பக்தி செய்தான். இறைவனை நேரடியாகச் சேவித்தல். இது மூன்றாவது வழி ஆகும்.
4. சத்துருக்கன் பரதனுக்கு உதவி புரிந்தான். இறைவனின் தொண்டர்களைப் போற்றுவது இறைவனை அடைவதற்கான நான்காவது வழி ஆகும்.

இராமபிரான் சிறந்த மகனாக, சிறந்த மாணவனாக, சிறந்த சகோதரனாக, சிறந்த அரசனாக, சிறந்த துணைவனாக, சிறந்த தந்தையாக, சிறந்த நண்பனாக, சிறந்த வீரனாக, சிறந்த பக்தனாக, சிறந்த தெய்வமாக இருந்து தனது கடமைகளைச் சிறப்புறச் செய்ததனாலேதான் தசாவதாரத்தில் இராம அவதாரம் மேலோங்கி நிற்கிறது. இம்முறைகளை மனிதனுக்குப் புகட்டுவதற்கே விஷ்ணு பகவான் இராம அவதாரத்தில் மட்டும் நான்கு அவதாரங்கள் எடுத்தார். மற்றைய அவதாரங்களில் தனியே தோன்றினார்.

கிருஷ்ண அவதாரத்தில் இரண்டு அவதாரங்களாகத் தோன்றியதும் கடமையின் சிறப்பைக் காட்டவே. ஏனெனில் இராம அவதாரத்திற்கு இலக்குவனாக வந்தவர், கிருஷ்ண அவதாரத்தில் பலராமராகத் தோன்றினார். இராமபிரான், இலக்குவன் தனக்குச் செய்த பணிகளைக் கிருஷ்ண அவதாரத்தில் தான் தம்பியாக அவதரித்து பலராமனுக்கு பணிவிடை செய்தார். கடமையின் சிறப்புத்தான் என்னே!

ஆகவே இன்றிலிருந்தாவது நாம் எமது பணிகளை எதுவித பிரதியுபகாரமும் இன்றி ஆற்றுவதன் மூலம் இறைவனைக் காண்போமாக. கடமைகளைச் சரிவரச் செய்து வரும்போது பல இன்னல்கள் எம்மை எதிர்கொண்டாலும் அவைகள் யாவும் புயலில் அகப்பட்ட தூசுபோல் மறைந்து விடும்.

கடமையின் உன்னதத்தை அப்பர் அடிகள் மிகத் தெளிவாக இரு அடிகளில் கூறினார். இறைவனுக்குக்கூட கடமை உண்டு என்கிறார். என்ன கடமை? அடியார்களைத் தாங்குதலாம். இறைவன் எம்மைக் காப்பாற்றுவதற்கு நாம், நம் கடமைகளைச் சிறப்பாகச் செய்யவேண்டும் என்று அப்பர் பெருமான் பகர்கிறார்.

**"உன்கடன் அடியேனையுந் தாங்குதல்**
**என்கடன் பணிசெய்து கிடப்பதே"**

ஆகவே எமது பணிகளை இயன்றளவு செய்யாமல் முயன்று நிறைவுறச் செய்யவேண்டும். அதற்கு ஆற்றங்கரையான் நம்மைத் துணையாகத் தாங்குவான்.

*முயற்சி செய்யும்வரையில் எவருக்கும் தம் திறமை தெரிவதில்லை.*

(தொடர்ச்சி...

உ

# 2009ஆம் ஆண்டு நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| நவநீதன் பாமினி | புறூடிலேன் | அரியாலை | 1000. 00 |
| பொ. கந்தையா குடும்பம் | புறூடிலேன் | அரியாலை | அரிசி, பொருட்கள் |
| சு. சிவதாசன் G.S. நிஷாந் | | புன்னாலைக்கட்டுவன் வடக்கு | 1500. 00 |
| ஐ. வேலாயுதர் | | கோப்பாய் | 1000. 00 |
| திருமதி தவமலர் சுரேந்திரநாதன் | | மயிலியதனை தொண்டைமானாறு | 2000. 00 |
| மார்க்கண்டு கருணாநிதி | | அச்சுவேலி | 1000. 00 |
| திரு திருமதி கைலாயநாதன் மூலம் Dr கணேஷ்குமார் குடும்பம் | | அமெரிக்கா | 5000.00 |
| Dr குகதாசன் | | யாழ்ப்பாணம் | 4000. 00 |
| திரு ஆறுதிருமுருகன் | | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| சாவித்திரியம்மா | | தும்பளை | 6000. 00 |
| ந. உஷேனி | | | 1000. 00 |
| வி.ந. ஸ்ரீதரன் | நீராவியடி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| க. சிவநடராசலிங்கம் | | கொக்குவில் | 4000. 00 |
| தி. தவபாக்கியராசா | | அச்சுவேலி தெற்கு | 1முடை சம்பா |
| சுசீலா நகைமாடம் | | பருத்தித்துறை | 5000. 00 |
| உரிமையாளர் ஏகாம்பரம் ரெக்ஸ் | பெரியகடை | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| க. ஞானச்சந்திரன் | நாகலிங்கம்வீதி | கொக்குவில் | 3000. 00 |
| இ. பாக்கியரத்தினம் மூலம் வி. சர்வானந்தன் | | நல்லூர் | 10000. 00 |
| திருமதி சிவராஜா | நன்நடத்தை உத்தியோகத்தர் | கல்வியங்காடு | 2500. 00 |
| திரு க. தெய்வேந்திரம் AI,J.P பிரான்பற்று | | பண்டத்தரிப்பு | 2000. 00 |
| சீதா ரீச்சர் | | கனடா | 100 டொலர் |
| R. மணிவாசகன் | | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| இ. கந்தசாமி | பெரியமதவடி | துன்னாலை | 2000. 00 |
| சற்குணராசா கலைச்செல்வி | | | 3000. 00 |
| K.V. துரைசாமி ஞாபகார்த்தமாக | | மயிலிட்டி | 2000. 00 |
| பெஷன் ஹவுஸ் | | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| சுமதி குடும்பம் | கனடா | மா. குலசேகரம்மூலம் | 22750. 00 |
| க. கமலதாஸன் | துன்னாலை மத்தி | கரவெட்டி | 1000. 00 |
| செ. சுப்பிரமணியம் | பெரியமாவடி | சாவகச்சேரி | 500. 00 |
| பூபாலசிங்கம் உதயதீபன் | குரும்பகட்டி | புலோலி | 1000. 00 |
| T. விக்னேஸ்வரன் | | லண்டன் | 2000. 00 |
| ச. விநாயகமூர்த்தி | சாளம்பை | கரணவாய் மத்தி | 1000. 00 |

மனிதன் கருணையைக் கைவிட்டாலும் கடவுள் அதை கைவிடுவதில்லை.

| | | | |
|---|---|---|---|
| தவயோகம் பார்த்தீபன் | முருகன்கோவிலடி மந்திகை | 1மூடை அரிசி | 2000. 00 |
| Dr T. ஸ்ரீஸ்கந்தராசா | | லண்டன் | 10000. 00 |
| Dr K. கனகசூரியர் | | கொழும்பு | 1500. 00 |
| வடிவேலு கமலநாதன் (டோகா) | | காரைநகர் | 6000. 00 |
| ரஜனி பரராஜசிங்கம் | | திருகோணமலை | 1500. 00 |
| சுப்பிரமணியம் ரமணிதரன் | மணலாவத்தை | வதிரி | 1100. 00 |
| N. சரவணபவன் | | கோண்டாவில் | 10000. 00 |
| கீதா ரவி | | | 49900. 00 |
| ஜீவமனோகரன் சுந்தரலிங்கம் | | சுவிஸ்லாந்து | 49384. 85 |
| செ. வல்லிபுரம் J.P இளை. ஆசிரியர் | | கரவெட்டி | 1000. 00 |
| வ. சிவராஜசிங்கம் இளை. உ. ஆணையாளர் | | கரவெட்டி | 1000. 00 |
| T. ஜெயசீலன் | சுதுமலை வடக்கு | மானிப்பாய் | 2000. 00 |
| N. பார்த்தீபன் | | மல்லாகம் | 10000. 00 |
| இராசா வாமதேவன் | | கந்தர்மடம் | 1500. 00 |
| திலகேந்திரம் குமாரி மாலினி | | வல்வெட்டி | 5000. 00 |
| தர்ஷினி மகேந்திரம் | C.A. நிறுவனம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| S. பாலசுப்பிரமணியம் | | கொழும்பு | 1000. 00 |
| ஆ. ராசரத்தினம் | | கொழும்பு | 1000. 00 |
| K.R. சிவயோகநாதன் (K.R.S) | | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| அமிர்தகி கருணாகரன் வியாகேஸ் | | | 2000. 00 |
| அப்புலிங்கம் | கோண்டாவில் | (கொழும்பு) | 2மூடை அரிசி, மரக்கறி |
| S. கோபாலகிருஷ்ணர் | | கொழும்பு | 1மூடை அரிசி |
| ச. இராசரத்தினம் | | யாழ்ப்பாணம் | 500. 00 |
| த. இராசதுரை குடும்பம் | | அச்சுவேலி | 1000. 00 |
| செல்வராணி நினைவாக ச. ஜெயதாசன் | | கோப்பாய் | 1000. 00 |
| Dr வெங்கடாசலம் சுதர்சன் | | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| ச. இளங்கீரன் | | நெல்லியடி | 500. 00 |
| திரு சிவலோகலிங்கம் | | நிலாவெளி | 10000. 00 |
| திருமதி சற்குணதேவி | | காரைநகர் | 1000. 00 |
| வி. இலட்சுமி | | காரைநகர் | 500. 00 |
| பிரியங்கா | | வதிரி | 1000. 00 |
| தம்பு விநாயகமூர்த்தி | மஞ்சத்தடி | இணுவில் | 10000. 00 |
| சுதாகரன் புவனா | நெல்லியடி | கரவெட்டி | 1500. 00 |
| நா. கோபிநாத் | K.K.S வீதி | மல்லாகம் | 2500. 00 |
| ந. தேவகுமாரன் | புறாடிலேன் | அரியாலை | 10000. 00 |
| செ. சண்முகராஜா | | கைதடி கிழக்கு | 1000. 00 |
| சு. சோமஸ்கந்தமூர்த்தி | | கொழும்பு | 450. 00 |

(தொடரும்...

*விவாதம் செய்வதைவிட இசைவு விரைவில் காரியத்தை நிறைவேற்றிவிடுகிறது.*

# திருவிளையாடற்புராண வசனரூபம்

-ஆறுமுகநாவலர்-

படலம்- 9

## எழுகடலழைத்த படலம்

வேதங்களாலும் அளவிடப்படாத முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் பாண்டியராகி செங்கோல் செலுத்திவந்த நாளிலே வேதவேதாங்கங்களை நன்கு உணர்ந்த முனிவர்களும் தேவர்களும் தினமும் அவரைச் சந்தித்து வந்தனர். கௌதம முனிவர் ஒருநாள் சந்தித்துத் திரும்பும்போது காஞ்சனமாலை வீட்டுக்குப் போனார். அவள், அவரை எதிர்கொண்டு அழைத்து ஆசனத்தில் இருத்தி அஞ்சலி செய்து, "பரமசிவமே பரம்பொருள் என்று தெளிந்த தவமுனிவரே! அடியேனுடைய பிறவித் துன்பத்தை நீக்கவல்ல தவம் யாது? அருள்செய்யும்" என்று விண்ணப் பித்தாள்.

கௌதம முனிவர் முகம் மலர்ந்து, மலையத்துவச பாண்டியனுக்கு வாய்த்த பெருங்கருணைப் பத்தினியே! நீ உலக மாதாவாகிய தடாதகைப் பிராட்டியாருக் குத் தாயானாய்! பிரம்ம விஷ்ணுவாலும் அறிய முடியாத சிவபெருமானை மருமக னாகப் பெற்றுக் கொண்டாய்! நீ அறியாத தவம் உண்டோ? இருந்தாலும் சொல் கிறேன். கங்கை முதலான நதிகளெல்லாம் சமுத்திரத்திலே நிறைவடைவதனால் சமுத் திரத்திலே தீர்த்தமாடுதல் மிகச் சிறந்தது" என்று கூறினார்.

இதனைக் கேட்ட காஞ்சனமாலை சமுத்திர தீர்த்தத்திலே மிக்க விருப்பம் உடையவளாய், தன் புதல்வியாகிய தடாத கைப் பிராட்டிக்கு தன் விருப்பத்தைத் தெரி வித்தாள். பிராட்டியாரும், "இதை என் பிராண நாயகருக்குத் தெரியச் செய்வேன்" என்று எம்பெருமான் திருமுன் சென்று கைகுவித்து வணங்கி நின்று, "குண்டோ தரன் பொருட்டு அன்று அன்னக் குழியை யும் வைகையையும் அழைத்த கருணைக் கடலே! இன்று என்தாய் சமுத்திர ஸ்நானம் செய்யவிரும்புகிறாள்" என்று விண்ணப்பம் செய்தார். சுந்தர பாண்டியரும் "ஏழு கடலையும் ஒருங்குசேர அழைப்போம்" என்று திருவுளம் கொண்டருளினார். உடனே ஏழுகடல்களும் கீழ்த்திசையில் உள்ள ஒரு வாவியினிடத்தே ஏழு வண்ணத் தோடு வந்து அடங்கின.

படலம்- 10

## மலையத்துவசனை அழைத்த படலம்

சுந்தரபாண்டியர் தடாதகைப் பிராட்டி யாரோடு வந்து, ஏழு கடலும் நிறைந் திருந்த வாவிக்கரையில் ஒரு நந்தவனத் திலே சிங்காசனத்தில் எழுந்தருளி இருந்தார். தன் மனைவியை நோக்கி "நாம் உன் தாயார் பொருட்டு ஏழு கடல்களையும் அழைத்துள்ளோம். நீ போய் உன் தாயை ஸ்நானம் பண்ணும்படி அழைத்துவா"

என்று பணித்தார். பிராட்டி தன் மாதா வாகிய காஞ்சனமாலையை அழைத்துக் கொண்டு வந்தாள்.

காஞ்சனமாலை, வாவிக் கரை யிலிருந்த பிராமணர்களைப் பார்த்து, "ஸ்நானம் செய்யும் முறையைக் கூறுமாறு" பணிவாகக் கேட்டாள். "கணவனுடைய கை; புத்திரனுடைய கை; பசுக் கன்றின் வால்; என்னும் மூன்றில் ஏதாவது ஒன்றைக் கையினாலே பற்றிக்கொண்டு ஸ்நானம் செய்வதே முறை" என்று பிராமணர்கள் பதில் கூறினர். காஞ்சனமாலை இதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தாள். "நான் கணவனோ மகனோ இல்லாத பாவியாகி விட்டேனே! என் செய்வேன்? கன்றின் வாலைப் பற்றி ஸ்நானம் செய்வேன்" என் றாள் காஞ்சனமாலை. மனம் மிக இரங்கிய பிராட்டியாரும் தாயின் மனக்குறையை எம் பெருமான் முன் விண்ணப்பம் செய் தார். எம்பெருமான், சுவர்க்கத்திலே இந்திர னோடு ஓராசனத்தில் அமர்ந்திருந்த மலயத் துவச பாண்டியனை மனதிலே நினைத்துக் கொண்டார்.

பாண்டியன் சிவபெருமானுடைய திருவுள்ளத்தை அறிந்து, சுவர்க்கத்திலிருந்து நீங்கி, ஒரு விமானத்தில் ஏறி வாவிக் கரையிலிருந்த எம்பெருமான் திருவடிகளை வணங்கும் பொருட்டு வந்தான். அவன் வணங்குமுன்பே, மலையத்துவன் தமது மாமன் என்கிற முறைமையினாலே அவரை ஆரத்தழுவி அருள்நோக்கம் செய்து, "நீ உன் மனைவியோடு போய் தீர்த்தமாடு வாயாக" எனத் திருவாய் மலர்ந்தருளினார். தடாதகைப் பிராட்டியார் எதிர் வந்து தழுவ, தானும் தழுவி மகிழ்ந்து மனைவி முன் சென்றான். காஞ்சனமாலை நாணத்தோடு கணவன் முன் வந்து வணங்கினாள்.

பின்பு, பிராமணர் முன்னே சங்கற் பம் செய்து பஞ்சாட்சரத்தை உச்சரித்து, தன் கணவனாகிய மலையத்துவச பாண்டி யனுடைய கையைப் பற்றிக்கொண்டு சமுத் திர ஸ்நானஞ் செய்தாள். பாண்டியனும் காஞ்சனமாலையும் ஸ்நானஞ் செய்து கரை ஏறியதும், சிவபெருமானுடைய திருவருளி னாலே சிவலோகத்தினின்றும் ஒரு தேவ விமானம் வந்திறங்கியது. இருவரும் அதில் ஏறி சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயி லின் உள்ளே சென்றனர். உள்ளே மருமக னாகிய சுந்தர பாண்டியரும், மகளாகிய தடாதகைப் பிராட்டியாரும் வீற்றிருக்கக் கண்டு பேரானந்தம் கொண்டு நின்றனர். பின்னர், மீண்டும் அந்த தேவ விமானத்தில் ஏறி எல்லாப் புண்ணிய உலகங்களையும் கடந்து சிவலோகத்தை அடைந்தார்கள்.

## ஆடிமாத குருபூசை தினங்கள்

**06.07.2009** **ஆனி 22 திங்கள்**
அருணகிரிநாதர் குருபூசை

**29.07.2009** **ஆடி 13 புதன்**
சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை

*விதி தைரியசாலிகளைத்தான் நேசிக்கும்.*

உ

# காவடி ஆட்ட வழிபாடும் கந்தப்பெருமான் திருவருளும்

திரு நீர்வைமணி அவர்கள்

முருகப்பெருமான்மேற் பக்திபூண்ட அடியார்கள் தம் நேர்த்தி வழிபாடுகளைப் பலவாறாகச் செய்து வருகின்றார்கள். அங்ஙனம் செய்யப்படும் முருகவழிபாடுகளிற் காவடி எடுத்து நேர்த்தி வழிபாடுகள் செய்வதென்பது தனிச்சிறப்புடையதாகும். இப்படிக் காவடி வழிபாடு செய்வோரும் பலவிதமாகச் செய்வதைக் காணலாம். காவடி வழிபாடுகளிற் குறிப்பிடக் கூடியன வாகத் தங்கக் காவடி, வெள்ளிக்காவடி, பாற்காவடி, சந்தனக் காவடி, பன்னீர்க் காவடி, சர்க்கரைக்காவடி, தீர்த்தக்காவடி, இளநீர்க்காவடி, சர்ப்பக்காவடி, எண்ணைக் காவடி, அலங்காரக்காவடி, பூக்காவடி, மச்சக்காவடி, அன்னக்காவடி, கற்பூரக் காவடி, புஸ்பக்காவடி, சேவற்காவடி, மணற்காவடி, தூக்குக்காவடி, பறவைக் காவடி, மயிற்காவடி, தேர்க்காவடி என்ற வாறு காவடி எடுத்து ஆடிப்பாடி, பஜனைகளுடன் வீதிவலம் வந்து நேர்த்தி செய்து வழிபடும் முருகவழிபாடு மிகவும் அற்புத மானதாகும்.

இவ்விதமாகக் காவடி வழிபாடு முருகப்பெருமானுக்குப் பல ஆண்டு களாகவே நடாத்தப்பட்டு வருகின்றது. காவடி வழிபாட்டைப் பற்றிய வரலாறு மிகவும் சுவாரஸ்யமானதாகும். அந்த வரலாறானது-

இமயமலைச் சாரலில் காணப் பட்ட இரு சிகரங்களை அகத்திய மாமுனிவர் சிவகிரி சக்திகிரி எனக்கொண்டு வழிபட்டு அவற்றை முருகன் அருளால் தமது இருப்பிடமான பொதிகை மலைக்குக் கொண்டுவரமுயன்று திருக்கேதாரம் வரை கொண்டுவந்து அருகே இருந்த வனத்தில் வைத்துவிட்டு இளைப்பாறினார். அந்த நேரத்திலே சூரபத்மனது நண்பன் இடும்பாசுரன் அவ்வழியால் வந்தான். அவன் முனிவர் பெருமானைப் பணிந்து வணங்கிச் சூரபத்மனுக்கு முருகக்கடவுள் அருள் புரிந்ததுபோல எனக்கும் முருகப்பெருமான் அருள்புரிய வேண்டும் என வேண்டினான்.

முருகன் அருள்வேண்டித் தொண்டு செய்வேன் என்றான். அப்பொழுது அகத்திய மாமுனிவர் இடும்பனிடம் இந்த இரு மலைச்சிகரங்களையும் பொதிகைமலை வரை எடுத்துவந்தால் உனக்குப் பெருமையும், புகழும், முருகன் அருளும் கிட்டும் என்றார். உடனே இடும்பன் மிக்க ஆவல் உடன் இரு மலைச் சிகரங்களையும் தூக்க முயன்றான். குறுமுனிவரான இந்தச் சிறிய உருவமுடையவராற் தூக்கிவரப்பட்ட மலைச் சிகரங்களைத் தன்னால் அசைக்கக்கூட முடியாதிருப்பது கண்டு மிகவும் மனம்வருந்தி முனிவர் பெருமானே! "எத்தனை மலைகளைச் சாதாரணமாக அசைத்த எனக்கு இது முடியாமல் உள்ளதே. தாங்கள்தான் எனக்கு அதற்கான நல்ல ஆற்றலைத் தரவேண்டும். அருள் புரிந்தருளுக" என வேண்டினான். மூல மந்திரத்தைச் செபித்தபடி முனிவரை வலம் வந்தான்.

அப்பொழுது அட்டநாகங்கள் கயிறாகவும், பிரம்மதண்டம் துலாத்தண்டமாகவும் முன்தோன்றவும், அகத்திய முனிவர் இடும்பனுக்கு முருகப்பெருமானது

நற்பண்புகள் என்ற நட்சத்திரங்களுக்கு இடையே இரக்கம் சந்திரனைப் போன்றது.

மூலமந்திரத்தையும், வழிமுறைகளையும் உபதேசித்து, "தண்டத்தின் இரு பகுதியிலும் கயிறுகளை உறிகளாகத் தொங்கவிட்டு மலைச் சிகரங்களை அவற்றிற் கட்டிவிட்டுத் தூக்கித் தென்திசை நோக்கிப் புறப்படுவாய். பின்னால் நான் வருகிறேன்" என்றார்.

இடும்பன் அவ்வாறே தூக்கிக் கொண்டு திருவாவினன்குடியைச் சென்று அடைந்தபோது சிகரங்கள் அவனைக் கனமாக அழுத்தவும் அங்கே அதனை இறக்கினான். சிறிது நேரம் இளைப்பாறிய பின் அதனைத் தூக்கமுயன்ற இடும்பனுக்கு அதனை அசைக்க முடியாதிருந்தது. அங்கே வில்வமர நிழலில் நின்ற சிறுவன் ஒருவன் இடும்பனின் முடியாமை கண்டு பரிகாசம் பண்ணிச் சிரித்தான். அதனைக்கண்டு கோபமுற்ற இடும்பன் பாய்ந்த வேகத்தில் சிறுவன் காலடியிலேயே வீழ்ந்து உயிர்துறந்தான். அச்சமயம் இடும்பன் மனைவி ஓடோடி வந்து, நின்ற சிறுவன் முருகனே என அறிந்து, "கந்தா! கடம்பா! என் கணவர் உன்னை யாரென்று தெரியாமற் செய்த பிழையை மன்னித்து எனக்கு மாங்கல்யப் பிச்சை தந்தருள வேண்டும்" என வேண்டினாள். சிறுவன் முருகனாகக் காட்சிதந்து அபயமளிக்கவும் இடும்பன் நித்திரைவிட்டு எழுந்தாற்போல விழித்து எழுந்தான்.

அப்போது முருகப்பெருமான், "இடும்பா! இந்த மலைச்சிகரங்கள் இங்கேயே இருக்கட்டும். மலையடிவாரத்தில் நீ காவல் புரிவாய். இந்த மலைச்சிகரங்களை நீ காவடிபோலத் தூக்கிச் சுமந்து வந்ததுபோல நமது அடியார்களும் காவடி தூக்கிவந்து தங்கள் குறைகளைப் போக்கிக் கொள்வார்கள். அப்படி வருபவர்கள் வாசலில் முதலில் உன்னை வணங்கிப் பின்பு என்னிடம் வருவார்கள்" எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

இடும்பனும் இடும்பியும் ஆனந்தக் கண்ணீர் சொரிய முருகா! முருகா! நாம் செய்த பாக்கியம் இதுவன்றோ என நிலத்தில் வீழ்ந்து வணங்கினார்கள். முருகன் இட்ட கட்டளைப்படியே மலையடிவாரத்தில் இடும்பன் காவல் புரியலானான். காவடி எடுத்து நேர்த்திக்கடன் செலுத்துவோரும் முதலில் வாசலில் இடும்பனாகிய காவற்காரனை நினைந்து காவடியாடி வழிபட்டே உட்சென்று தம் கடனை நிறைவேற்றுவார்கள்.

இவ்வாறு காவடியாட்டம் பற்றிக் கூறப்படுவதிலிருந்து நாமும் உள்ளன்புடனும், பயபக்தியுடனும் இந்த நேர்த்திக் கடன்களைச் செய்து இறைவன் அருளைப்பெற வேண்டுமன்றிக் காவடியாட்டத்தைக் கேளிக்கையாகவோ, தெருக்கூத்தாகவோ எண்ணிச் செய்வதனால் இறையருளைப் பெறமுடியாது என்பதை உணரமுடிகின்றது.

எனவே அவரவர் இயல்புக்கு அமையக் காவடி எடுத்து வழிபாடுகள் செய்து முருகன் திருவருள் பெற்று நல் வாழ்வு நாடுவோமாக.

### *வளர்ச்சி*

நல்ல உணவுகளை உண்பதால் உடல் வளரும். நல்ல நூல்களைப் படிப்பதனால் உனது உணர்ச்சி வளரும். நல்ல உளத்துடன் சதா இறைவனை நினைப்பதனால், உணர்ச்சியையும், உயிரையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.

(தொடர்ச்சி...

உ

# ஔவையார் அருளிச்செய்த கொன்றைவேந்தன்

*மூலமும் உரையும்*

*7. எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்.*

ப-ரை. எண்ணும்- கணித நூலும், எழுத்தும்- இலக்கண நூலும், கண் எனத் தகும்- (மனிதருக்கு) இரண்டு கண்களென்று சொல்லப்படும்.

*8. ஏவா மக்கள் மூவா மருந்து.*

ப-ரை. ஏவா- (பெற்றவர் இதைச் செய் என்று) ஏவுவதற்கு முன் குறிப்பறிந்து செய்கிற, மக்கள்- பிள்ளைகள், மூவாமருந்து- (அப்பெற்றவருக்குத்) தேவாமிர்தம் போல்வார்.

*9. ஐயம் புகினும் செய்வன செய்.*

ப-ரை. ஐயம் புகினும்- பிச்சையெடுத்தாலும், செய்வன- செய்யத்தகுங் கருமங்களையே, செய்- (நீ விடாது) செய்.

*10. ஒருவனைப் பற்றி ஓரகத்து இரு.*

ப-ரை. ஒருவனை- (நற்குணமுடைய) ஒருவனை, பற்றி- (துணையாகப்) பற்றிக்கொண்டு, ஓரகத்து- ஓரிடத்திலேதானே, இரு- (நீ எப்போதும்) வாசம்பண்ணு.

*11. ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்.*

ப-ரை. வேதியர்க்கு- பிராமணருக்கு, ஒழுக்கம்- ஆசாரமானது, ஓதலின்- (வேதம்) ஓதலினும், நன்றே- நல்லதே.

*12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.*

ப-ரை. ஔவியம்- பொறாமை வார்த்தைகளை, பேசுதல்- (ஒருவன்) பேசுதல், ஆக்கத்திற்கு- (அவன்) செல்வத்திற்கு, அழிவு- கேட்டைத் தருவதாகும்.

*13. அ'.கமும் காசும் சிக்கெனத் தேடு.*

ப-ரை. அ'.கமும்- தானியத்தையும், காசும்- திரவியத்தையும், சிக்கெனத்தேடு- நீ வீண்செலவு செய்யாமற் சம்பாதி.

*14. கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை.*

ப-ரை. கற்பு எனப்படுவது- (பெண்களுக்குக்) கற்பென்று சொல்லப்படுவது, சொல்- (கணவர்) சொல்லுக்கு, திறம்பாமை- தப்பி நடவாமையாம்.

*15.காவல் தானே பாவையர்க்கு அழகு.*

ப-ரை. காவல் தானே- (கற்புக்கு அழிவு வராமல் தம்மைக்) காத்துக்கொள்வது தானே, பாவையர்க்கு- பெண்களுக்கு, அழகு- அழகாகும்.

(தொடரும்...

உ

# தொண்டைமானாறு நிலம் முழுவதையும் உரிமைகோரிய முதியவர்

### திருமதி சிவனேசசுந்தரம் அருட்செல்வி அவர்கள்

செல்வச்சந்நிதி ஆலயத்தில் இற்றைக்கு எவ்வளவோ அற்புதங்கள் நிகழ்ந்து வருகின்றபோதும் யாவுமே வெளிச்சத்துக்கு வந்துவிடுவதில்லை. "உண்மைகள் என்றும் உறங்குவதில்லை அது என்றோ ஒருநாள் விழித்துக் கொள்ளும்" என்ற வாசகம் எவ்வளவு உண்மையானது.

சந்நிதியான், ஆற்றங்கரையான், கல்லோடைக் கந்தன் என்றும் பலவாறாகப் போற்றப்பட்டுவரும் வரலாற்றுப் பெருமை மிக்க கோயிலில் நிகழ்ந்த ஓர் அற்புதம் இதோ.

நமது நாட்டை ஆட்சி செய்த அந்நியர்களான போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்றோர் வணிக முறையினால் இப்பகுதிக் காணிகளுக்குப் பதிவேடுகள் உண்டாக்கித் தோம்பு என்னும் காணி உறுதிகளை ஏற்படுத்தினர். தொண்டைமானாறு என்னும் கிராமத்தில் அமைந்த செல்வச்சந்நிதித் தலத்தால் இக் கிராமம் நாளடைவில் பல்வேறு சிறப்புக் களையும் பெற்று விளங்கியது. கடல் நீருடன் தொடர்பு கொண்டதால் உப்பு நீர் ஆற்றின் பகுதிகட்குச் சென்று கரண வாய்ப் பகுதியில் உப்பு விளையலாயிற்று. இவ் உப்புக்களை ஆற்று முனையில் மால் அமைத்துச் சேமிக்க நாளடைவில் இக்கரை "உப்புமால்" எனப் பெயர் பெற்ற தோடு வாணிபமும் சிறப்புற்றது.

இக்கால கட்டத்திலேதான் ஒருநாள் பல பொதுமக்கள் பணம் கொடுத்து காணி வாங்கிப் பதிவேடுகளை மேற் கொண்ட போது ஒரு முதியவர் பூக்கொய்யும் (ஓலையால் இழைக்கப்பட்டது) கூடையுடன் பிரசன்னமானர். அக்கூடை நிரம்பக் காசுத் தாள். இதனைப் பார்த்த வெள்ளையர்கள் அதிர்ந்து போனார்கள். அந்தக்காலத்தில் ஒரு காசுத்தாள் என்றாலே எவ்வளவோ பெறுமதி. அதிலும் பூக்கூடை நிரம்பிய காசுத்தாள்கள் இன்னும் எவ்வளவு பெறுமதி. இந்த முதியவருக்கு எப்படி இவ்வளவு பணம் என்று அதிசயித்துப் பார்த்தபோது அந்த முதியவர் வெள்ளை யரை நோக்கி "இந்தப் பணத்திற்கு எனக்குத் தொண்டைமானாறு நிலத்தை அளந்து தா'' என்றார். அப்பொழுது வெள்ளையர்கள் இந்தக் காசின் பெறு மதிக்கு நிலத்தை எங்கே அளக்க முடியும்? எனவே தொண்டைமானாறு நிலம் முழு வதும் இனி உங்களுக்கே சொந்தம் என்றுகூறி காணிப்பதிவையும் மேற்கொண்டு உறுதியையும் கொடுத்தனர். சிறிது நேரத் தில் கதை எங்கும் பரவி மக்கள் அந்த முதியவரைப் பார்க்கவந்தபோது முதியவர் மாயமாய் மறைந்து விட்டார். முருகப் பெரு மானே முதியவராக வந்தவர் என்று மக்கள் புரிந்து கொண்டனர்.

எங்கே தனது நிலமும் பறிபோய் விடுமோ அப்படிப் பறிபோனால் நாட்டின்

நாலாதிசையிலிருந்தும் வரும் பெருந் தொகை அடியவர்கள் எப்படிக் கோயி லுக்கு வரமுடியும்? தங்க முடியும்? மடங் கள் எப்படி இருக்க முடியும்? திருவிழா வுக்கு வரும் இலட்சக்கணக்கான அடியவர் கள் எப்படி திருவிழாவில் கலந்து கொள் வது? காவடிகள், கற்பூரச் சட்டி எடுப்பது யாவுமே சிரமம் என்பதை உணர்ந்து தீர்க்கதரிசனத்துடன் தொண்டைமானாறு நிலத்தை தனக்குச் சொந்தமாக்கிவிட்ட முருகப்பெருமானின் கருணை, தீர்க்க தரிசனம் யாவுமே அற்புதம் தான்.

### *சிவனை வணங்கச் சிறந்த விரதம் சிவராத்திரி*

சிவபெரு மானின் திருவிளை யாடல்
தெரிந்தி டாத பிரமா விஷ்ணு
அவமே தம்முள் போட்டி போட்டு
அடிமுடி தேடி அலுத்த வேளையில்
சிவபெரு மானே ஜோதி வடிவாய்த்
தோன்றி அவர்தம் கர்வம் அடக்கினார்
சிவராத் திரியெனும் சிறந்த நாளாம்
சிவனை நினைத்திட உகந்த நாளாம்

புலியால் துரத்தப் பட்ட வேடன்
புகலிடம் தேடி மரத்தில் ஏறினான்
சலியா தபுலியும் காத்து நின்றது
சாய்ந்தது பொழுதும் இரவும் ஆனது
பலியா காதிருக் கமர இலைகளைப்
பறித்துப் போட்டான் தூக்கம் மறைந்தது
கல்லி லான லிங்கம் ஒன்று
கவனிப் பாரற் றுக்கிடந் ததங்கே

விடிந்தது பொழுது புலியும் போனது
விரைந்து இறங்கிய வேடன் கண்டான்
அடியில் கிடந்த லிங்கத் துக்கு
அவனை அறியாது செய்த பூசைகள்
முடிவில் கிடைத்தது முத்தியே யாகும்
முழுஇர வும்விழித் துப்பூ ஜித்ததால்
விடியும் வரைக்கும் சிவனை வணங்கினால்
விளையும் பயனே முத்தி தானே

*கவிஞர் வ. யோகானந்தசிவம் அவர்கள்.*

**நற்சிந்தனை படைத்தவன் உள்ளத்தில் ஆசை நுழைவதில்லை.**

உ

# ஆசை

**-வாரியார் சுவாமிகள்-**

**ஆசைகூர் பத்தனேன்:**

கூர்தல் - மிகுதல். இறைவனிடத்திலே ஆசை மிகுதல். ஆசையை ஒழித்தவரே பெரியோராவர்.

**"ஆசையறு மின்கள் ஆசையறு மின்கள்**
**ஈசனோ டாயினும் ஆசையறு மின்கள்"**

என்பார் திருமூலர்.

ஆசைகூர் பக்தன் என்கிறார் அடிகளார். ஆசையென்பது கொடியது. அது பிறவியைத் தருவது. ஆசையால் அழிந்தோர் பலர். ஆசையால் அழிகின்றவர் பலர். ஆசை அற்றவரே ஆன்றோராவார்.

ஆசை என்பது கொடிதுதான். ஆனால், அது தன்பொருட்டு என்கிறபோதுதான் கொடியதாகிறது. பிறர் பொருட்டு ஆசைப்படுவது தவறாகாது. ஏழைகளின் துன்பத்தைப் பார்த்து இரக்கமுற்று "அந்தோ! இந்த உயிர்களெல்லாம் பசியாறி இன்பமுறமாட்டாவோ? இந்த நாட்டிலுள்ள பயிர்கள் செழித்து உயிர்கள் இனிதுவாழ வேண்டும்; எல்லோரும் அறநெறி நின்று சன்மார்க்க சீலர்களாக வேண்டும்" என்று இதுபோல் பிறர்பொருட்டு ஆசைப்படுவதும் ஆசைதான். ஆனால், இந்த ஆசை பிழையாகாது. பிறவியைத் தராது.

இச்சையென்றாலும் ஆசையென்றாலும் ஒன்றுதான். தாயுமானவர் இச்சைப்படுகிறார்; தன் பொருட்டன்று.

**"கொல்லா விரதங் குவலயம்எல் லாம் ஓங்க**
**எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை பராபரமே"**

அருணகிரிநாதர் "ஆசைகூர் பக்தன்" என்று கூறியது இந்த ஆசைதான். தன் பொருட்டன்று. உலகமெல்லாம் முருகன் புகழ் ஓதவேண்டும். யாண்டும் அறநெறி பரவ வேண்டும்" என்ற ஆசையேயாகும்.

**விரகுழையே குழைத்து:**

விரகம்- ஆசை

இந்த உடம்பு என்ற மரத்தில் ஆசை என்ற தளிர்கள் கோடிக்கணக்காக உண்டாகின்றன. தளிர்கள் தோன்றி முதிர்வதும் உதிர்வதுமாகவே இருக்கும். அதேபோல ஆசைகள் பல உண்டாவதும், அவை நிறைவேறாமல் அழிவதுமாக இருக்கின்றன.

வாழ்வில் எண்ணில்லாத ஆசைகள்; எத்துணை போகம் எய்தினும் திருப்தியுறாது மேலும் மேலும் பொருள்கள் வேண்டும் வேண்டும் என்ற அவா எழுகின்றது.

**இருளிலைகளே தழைத்து:**

இருள் என்பது அறியாமை என்று உணர்க. ஆசையினால் உண்டாகும் "ஆசை" என்ற சூறாவளி வந்தபோது அறிவு என்ற வான்பொருள் சிதறுண்டு செல்கின்றது.

தன் மகன்மீது அளவற்ற ஆசை வைத்திருந்தான் தசரதன். அதனால் ஸ்ரீ இராமருடைய ஆற்றலையும் அவருடைய அவதார நோக்கத்தையும் அறியாது கெட்டான். ஸ்ரீராமர் கானகம் புறப்பட்டபோது, அவருடைய ஆற்றலை உணராது, உயிர் விடுத்தான். மிதிலையில் மன்னர்கள் யாராலும் எடுக்கமுடியாத வில்லை எடுத்து ஒடித்த தன்மையைக் கேட்டும், சூரிய குலத்தை இருபத்தொரு தலைமுறை கருவறுத்த பரசுராமனை ஒரு நொடிப்பொழுதில் வென்ற திறத்தைக் கண்டும் அவருடைய ஆற்றலை அறிந்தானில்லை. ஏன்? ஆசையே காரணம்.

ஆசை கொடிது, கொடிது. எல்லாப் பொருள்களிடத்தும் அன்பு இருக்கவேண்டும். அன்பு ஒளிமயமாகும். ஆசை இருள் மயமாகும்.

ஒரு புதல்வனிடத்திலே தந்தையைக் காட்டிலும் தாய்க்கு அதிக பாசம். இதுதான் உலக இயல்பு. ஸ்ரீராமர் கானகஞ் சென்றபோது பெற்றுவளர்த்த தாய் கோசலை மாண்டாளில்லை. தந்தை தசரதன் மாண்டான். இராமனிடத்தில் கோசலைக்கு அன்பு இருந்தது. மகனுடைய ஆற்றலை அறிந்திருந்தாள். இவன் உலகத்தின் பொதுவுடைமை என்ற தெளிவு கோசலைக்கு இருந்தது. தசரதனுக்கு மகனிடத்திலே ஆசை அதிகம். அதனால், அறியாமை மேலிட்டது. மகனைத் தனக்கே உரிமையாக எண்ணி மாண்டான்.

ஆதலினால், ஆசையினால் அறியாமையுண்டாகும். ஆசை தளிர்; அறியாமை இலை. தளிர் இலையாக மாறுவதுபோல், ஆசை அறியாமையாக மாறுகின்றது என்று அறிக. அடிகளார் கூறிய, "இருளிலைகளே தழைத்து" என்ற இந்த அழகிய சொற்றொடர் மிகவும் சிந்தனைக்குரியது.

**மிகநீளும் இழவு நனையே பிடித்து:**

இழவு- கேடு; நனை- அரும்பு

ஆசையினால் அறியாமையும், அறியாமையினால் பெருங்கேடும் உயிர்களுக்கு ஒன்றன்பின் ஒன்றாக விளைகின்றன. கேடுகளுக்கெல்லாம் மூலகாரணம் அறியாமை என்பதை மறவற்க. "கேடுவருமுன்னே மதி கெட்டுவரும் பின்னே" என்ற முதுமொழியையும் ஓர்க.

விறகு பிளப்பான் ஒருவன் ஒரு மரத்தைப் பகுதி பிளந்து, பிளந்த பகுதியில் ஓர் ஆப்பினை வைத்துவிட்டு, "நாளை வந்து மற்றப் பகுதியினைப் பிளப்போம்" என்று சென்றான். ஒரு குரங்கு அம்மரத்தின்பால் வந்து, பிளந்த பிளப்பில் தன்காலை நுழைத்துக் கொண்டு பெருஞ்செயல் செய்வதாகக் கருதி, அந்த ஆப்பை அரும்பாடுபட்டு அசைத்துப் பிடுங்கி எடுத்தது. கால் அகப்பட்டுக்கொண்டு சொல்லொணாத் துயரமுற்றது. இந்தக் கேடு குரங்குக்கு அறியாமையால் வந்தது.

**"கவர்பிளந்த மரத்தொளையில் கால்நுழைத்துக் கொண்டே**
**ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்கு"**

என்பது பட்டினத்தடிகள் திருவாக்கு.

உ

(தொடர்ச்சி...

# மோகனதாஸ் சுவாமிகளின் வட இந்திய ஸ்தல யாத்திரை



**காலம்: 26.07.2008 சனி காலை 8.00மணி**

**இடம்: காசி (வாரணாசி)**

காசி நகரத்தின் வடக்கில் "வருணா" நதியும், தெற்கில் "அசி" நதியும் கங்கைநதியில் கலக்கின்றதால் காசி "வாரணாசி" என்றும் அழைக்கப்படுகிறது. ஆதி காலத்திலிருந்தே காசி இந்துக்களின் புகழ்பெற்ற ஸ்தலமாகும். பகவான் ஆதி சங்கரர் இன்றும் காசியில் இருந்து வரு கிறார் என்றே பலரும் நம்புகின்றனர். எந்த ஜீவராசியும் தன்னுடைய சரீரத்தை இங்கு தியாகம் செய்தால் மோட்சம் அடைந்து சிவலோகம் செல்வதாக ஐதீகம். ஆகை யால் பலரும் காசியிலே கடைசிக் காலத் தைக் கழித்து இங்கேயே இறந்துவிட விரும்புகிறார்கள்.

காசி ரயில் நிலையத்திலிருந்து விஸ்வநாதர் கோயில் சுமார் 2 மைல் தூரத்தில் இருக்கிறது. காசி ரயில் நிலை யத்தின் அருகில் யாத்திரீகர்கள் தங்கு வதற்குச் சத்திரம் ஒன்று இருக்கிறது. கங்கை நதியின் படித்துறைகளையும்,

கோயில்களின் கோபுரங்களையும் நகரத்தின் அழகையும் பார்க்கும் யாத்திரீகர்களின் ஆனந்தத்துக்கு அளவேயில்லை.

காசியின் நீளம் கங்கைக்கரை ஓரமாக 4 மைல்கள். இதில் 64 ஸ்நான படித்துறைகள் இருக்கின்றன. அவற்றினை ஒட்டி உயர்ந்த மாளிகைகள் இருக்கின்றன. நடுவே ஆலயங்களும் உண்டு. கங்கையில் நீராடிப் பிதிர்க் காரியங்களைச் செய்யவரும் தென்னிந்தியர்களுக்கு உதவுமுகமாக பல தென்னிந்தியப் புரோகிதர்களும் இருக்கிறார்கள். பிதிர்க்கடன்களை நிறைவேற்றித் தானம் வழங்குவதைப்போல, தம்பதியரும் கங்கையில் நீராடித் தம் நல்வாழ்வுக்காக தானமும் வழங்குகிறார்கள்.

சங்கரமடம், குமரகுருபரர் மடம், திருப்பனந்தாள் மடம் என யாத்திரீகர்களுக்குப் பேருதவிபுரியும் மடங்களும் உண்டு. தனியார் விடுதிகளும் உண்டு.

தினமும் மாலை 6.00 மணிக்கும் 8.00 மணிக்கும் இடையே நடைபெறும் கங்கா பூசையானது அதிவிசேடமானது. காசி மகாராஜாவின் வழித்தோன்றல்கள் இந்தப்பூசையில் தினமும் கலந்துகொள்கின்றனர். தாரக மந்திரம்போல ஐந்து விடயங்களை அனைவரும் கூறிக் கொள்கிறார்கள். காகம் கத்தாது. கருடன் பறக்காது. மாடு முட்டாது. பூ மணக்காது. சவம் மணக்காது. தினமும் பல்லாயிரவர் பிதிர்களுக்குப் பிண்டம் போடும் இடமாக இருப்பதால் சிதறுண்டு கிடக்கும் தீன் பண்டங்கள், அரிசி, தானிய வகைகள் போன்றவற்றை எடுக்கக் காகங்கள் காத்திருக்கின்றன. ஆனால், காகங்கள் கத்தியதை நாம் காணவேயில்லை. கோயில்களுக்குச் செல்லும் குறுகலான வீதிகளில் அங்கும் இங்கும் அலைந்து திரியும் மாடுகள் யாரையும் முட்டித் தள்ளியதில்லை.

காசி விஸ்வநாதர் ஆலய தரிசனம் முக்கியமானதும் முதன்மையானதுமாகும். விஸ்வநாதரின் மகத்துவமே காசி நகரின் பெருமையாகும். விஸ்வலிங்கம் வழிபடுவோரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அழகு வாய்ந்தது. கோயில் வாசலில் தொங்கவிடப்பட்டிருக்கும் பெரிய மணியின் சத்தம் காசிமுழுவதும் கேட்கும். அந்த வேளையில் அனைவரும் தலை குனிந்து நடந்துசெல்வதைக் காணமுடியும். மேற்கு நோக்கிய மூர்த்தியை நான்கு புறங்களிலிருந்தும் வழிபடலாம். அதிகாலை முதல் நண்பகல் வரை சந்நிதி திறந்திருக்கும். பின்னர் உச்சிக்காலப்பூசை நடைபெறுகிறது. நாமே சிவலிங்கத்துக்கு கங்கை நீராலும் பால்கொண்டும் அபிஷேகம் செய்து ஆனந்திக்கிறோம். ஒரே நாளில் ஐந்து தடவை நாம் செய்யும் ஆராதனை சிறப்பென மக்கள் கருதுவதால், ஐந்து முறை கங்கையில் நீராடி ஐந்துமுறை விஸ்வநாதரைத் தரிசனஞ்செய்ய வருகிறார்கள்.

விஸ்வநாதர் கோயிலுக்கு அருகே அன்னபூரணியம்மன் திருக்கோயில் உள்ளது. காசிக்கு அன்னையே அரசி ஆவாள். காசியில் உள்ள அனைவருமே பசி பட்டினி என்றில்லாமல் இருக்கும்படி அன்னபூரணா அருள் பாலிக்கிறாள். அன்னம் அளிக்கும் அன்னைக்குப் பலரும் அன்னதானமும் செய்கிறார்கள். ஆலயத்தைச் சுற்றியுள்ள கோசாலையில் உள்ள பசுமாடுகளுக்குப் பலரும் புல்லுப்போட்டு வணங்குகிறார்கள். அன்னபூரணியை பல்கணி வழியாகத்தான் தரிசிக்க வேண்டும். தீபாவளியை அண்மித்த மூன்று நாட்

**இருளைப்போக்கும் விளக்கிற்குத் தன் நிழலைப்போக்கும் சக்தி இல்லை.**

களுக்கு மட்டுமே அன்னபூரணியின் தங்கச் சிலை உள்ள சந்நிதி திறக்கப்படுகிறது.

காசி விசாலாட்சியின் ஆலயம் விஸ்வநாதர் ஆலயத்திலிருந்து சிறிது தூரத்தில் சந்து ஒன்றினுள்ளே அமைந்து உள்ளது. தமிழ்நாட்டுப் பாணியிலே இங்கே அபிஷேகம், அர்ச்சனை, பூஜை எல்லாம் நடைபெறுகிறது. அன்னை விசாலாட்சியின் அருள்வேண்டி நாமும் பிரார்த்தனை செய்தோம்.

**காலம்: 27.07.2008 ஞாயிறு காலை 8.00 மணி**

**இடம்: காசி (வாரணாசி)**

காலையிலேயே நாம் காகபைரவர் சந்நிதி சென்று வணங்குகிறோம். பைரவ நாதர் கோயில் ஒன்றுதான் முஸ்லீம்களின் படையெடுப்புக் காலத்தில் தப்பித்த ஒரே ஆலயம் எனக் கோயில் வரலாறு சொல் கிறது.

சாரநாத் பனாரசிலிருந்து 6 மைல் தூரம் வடக்கே உள்ளது. இது புத்த மதத்தின் தாய்வீடு என வர்ணிக்கப்படு கிறது. காசியிலிருந்து ரிக்ஷா, கார், ரெயிலில் சாரநாத் போகலாம். சாரநாத் பௌத்தகோயில் கி.மு. 5ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக அறியமுடிகிறது. புத்தர் இங்கே ஒரு சாதாரண குடிசையில் இருந்து தவம் செய்ததனால் இந்த இடம் புனிதம் அடைந்துள்ளது. பிற்காலத்தில் செங்கற் களால் கட்டப்பட்ட அழகான புத்த கோயிலை நாமும் வணங்கிச் செல்கிறோம்.

காசிராஜாவின் அரண்மனை கங்கை நதிக்கரையின் தெற்குப்புறத்தே அமைந்துள்ளது. அரண்மனையின் ஒரு பகுதியினை நூதனசாலையாக மாற்றி உள்ளார்கள். ராஜா பாவித்த அத்தனை பொருட்களும் காட்சிக்காக வைக்கப் பட்டுள்ளன. பொருட்கள் அடுக்கப்பட்டிருந்த விதம் கவர்ச்சியாகவிருந்தது. பலமொழி களிலும் அவற்றுக்கான விளக்கங்களும் எழுதப்பட்டிருந்தது.

காசி ராஜாவினால் வழங்கப்பட்ட 1300 ஏக்கர் நிலப்பரப்பில் பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. பனா ரஸின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள இந்த மிகப்பெரிய பல்கலைக்கழகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கான வளாகங்கள் தனித்தனியாக அமைந்துள்ளன. வளாகத் தினுள் காணப்படும் பெரிய கட்டிடங்களும் அவற்றின் அழகும் பிரமிக்க வைக்கின் றன. சமஸ்கிருத வளாகத்தில் அழகிய விஸ்வநாதர் ஆலயம் ஒன்றைக் கட்டி உள்ளார்கள்.

அடுத்ததாக நாம் சங்கடம் தீர்க் கும் ஆஞ்சிநேயரைத் தரிசித்தோம். நமக்கு உள்ள எல்லாச் சங்கடங்களையும் தீர்த்து வைக்குமாறு ஆஞ்சிநேயரை வேண்டிக் கொண்டோம். ஆஞ்சிநேயர் கோயிலுக்கு அருகே இருப்பது துர்க்கை அம்மன் ஆலயம். அதன் அருகே கௌடி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. கௌடி அம் மனைச் சோழியும் (சோகியும்) காசும் போட்டு வணங்குகிறார்கள். சோழிகள் கூறு கூறாக வெளியே விற்கப்படுகிறது.

(தொடரும்....

உ

(தொடர்ச்சி...

# அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்....

செல்வி தி. வரதவாணி அவர்கள்

கல்லுள்ள இடமெல்லாம் பூ வைக்கும் எனக்கு கருணை இல்லாமல் கஷ்டத்தை ஏன் தருகிறாய் கடவுளே. வயிற்று வருத்தம் என்று தீரும். ஏழு மாத மாக குணமானபாடில்லை. வைத்தியர் கள் மாற்றமுடியாத (புற்றுநோய்) நோய் என்று கூறி உடல் வருத்தத்தை விட உளத்திற்குப் பெருவருத்தத்தை அளித் திருக்கிறார்கள் என்ன செய்வேன். ஒன்றரை வயது மகன், கணவன் என்ன செய்வார் என வாய் புலம்பிய வண்ணம் கண்ணீ ரால் நனைந்த முகத்துடன் ஜெகதீஸ்வரி கூரையைப் பார்த்த வண்ணம் அமர்ந்திருந் தார். வருத்தம் பார்க்க வரும் சிலர் சைவத் திலிருந்து கிறிஸ்தவம் மாறியதுதான் உனக்கு உந்த வருத்தம் வந்தது என்று வைது கொண்டு இருந்தார்கள். இவ்வாறு இருக்கையில், ஒரு அம்மையார் வீட்டினுள் நுழைந்தார். அவர் ஜெகதீஸ்வரி இடத்தே மிகுந்த அன்பு மிக்கவர். சிறிதுநேரம் ஆறுதலாகக் கதைத்தார். நானும் பல கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருந் தேன். இப்பொழுதுதான் எனக்கு ஓரளவு கஷ்டங்கள் நீங்கியவண்ணம் இருக்கிறது. அதற்குக் காரணம் விநாசித்தம்பி ஐயா தான். நீரும் ஒருமுறை அங்கு போய்ப் பாருமன். ஆனால் அவரிடம் போகவேண் டும் என்றால் நல்ல சுத்தமாகப் போக வேண்டும். அவர் அழைத்தால்த்தான் உட் செல்ல வேண்டும்" என்று கூறினார்.

இதைக்கேட்டுக்கொண்டு இருந்த ஜெகதீஸ்வரியின் கணவன் செபஸ்தியன் அப்படி என்றால் நான் நாளை போகிறேன் என்று கூறி உடனே தமது வீட்டைக் கழுவி சுத்தம் செய்தார். மறுநாள் நீராடி வீட்டினுள் புகாமல் விநாசித்தம்பி ஐயாவிடம் வந்தார். கூட்டத்துள் ஒருவராக நின்றார். சிறிது நேரத்தில் அச்சுவேலி வாரும் என்று ஐயா கூப்பிட்டார். யாரும் தெரிந்த அச்சுவேலி காரர் யாரையோ ஐயா கூப்பிடுகிறார் என்று செபஸ்ரின் சுற்றும்முற்றும் பார்த்தார். உம்மைத்தான் அச்சுவேலியில் இருந்து வந்தவர் வாரும் என்று இரண்டாம் முறை அழைத்தார். "நான் அச்சுவேலியில் இருப் பது இவருக்கு எப்படித் தெரியும்" என எண்ணிய செபஸ்ரின் இறை கருணையை மனதில் வாழ்த்தி உள்ளே சென்றார்.

ஒரு பேப்பரில் கடகடவென எழுதியவண்ணம் "உம் மனைவியின் வருத் தத்திற்கு நான் எழுதியுள்ள பட்டைகளை ஒரு செம்புநீரில் இட்டு ஒரு டம்ளர் நீர் வரும் அளவுக்கு நன்கு காய்ச்சிக் கொடுத்து வாரும் சுகம் வரும்" என்றுகூறி விபூதியும் நூலும் கொடுத்து உம் மனைவியை கூட்டி வரச்சொல்லும்போது கூட்டிவாரும் என்று கூறி விடைகொடுத்தார். வீடு சென்றவர் ஐயா சொன்ன பட்டைகளை நன்கு காய்ச்சி மனைவிக்குக் கொடுத்ததுடன் விபூதியை அணிவித்து நூலையும் கட்டி விட்டார். ஏழு மாதமாக குணமாகாத பெண் ணுக்கு அக்குடிநீர் குடித்த 3 மணித் தியாலங்களில் எல்லாம் சுகமானது. பூரிப் படைந்த ஜெகதீஸ்வரி ஐயாவிடம் போக வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆயினும்

தன் வலிமையைக் கணித்த பின்னரே செயலில் ஈடுபடவேண்டும்.

அவர் வரச்சொல்லும்போதுதான் போக வேண்டும் என அழைப்புக்குக் காத்திருந் தார்.

இது நடந்த பின்னர் அடிக்கடி ஜெகதீஸ்வரியின் கணவன் ஐயாவிடம் சென்று வரலானார். பக்கத்தில் இருப்பவர் கள் மாற்றமுடியாத வருத்தம் உனக்கு உடனே எப்படிமாறும் அது உள்ளடங்கி இருக்கிறது என்றுகூறிப் பயப்படுத்தலாயி னர். அப்போதெல்லாம் ஐயாவினை நினைத்து நினைத்து அப்பெண் அழுவார். இப்படியே மூன்று மாதங்கள் கழிந்த பின் னர் ஒருமுறை ஜெகதீஸ்வரியை வரும்படி ஐயா கூறிவிட்டிருந்தார். அப்பெண்ணும் ஐயாவிடம் வந்து பாதார விந்தங்களில் வீழ்ந்து அழுது புலம்பினார். அதற்கு ஐயா நீ பயப்படாதே உனக்கு ஒன்றுமில்லை என்றுகூறி ஆசி நல்கினார். அதன் பின்னர் ஓர் பெண்மகவும் கிடைத்திருக்கின்றது. இனிதே குருவருளால் வாழ்ந்து வருகிறார்.

இவ்வாறு ஐயாவின் சமாதிக் கோயிலைத் தரிசிக்க வந்த ஜெகதீஸ்வரி கூறி ஐயாவின் அருட்கடாட்சத்தை எண்ணி அழுது நின்றார். இதுமட்டுமல்ல தனது தங்கையின் குழந்தையின் தீர்க்கமுடியாத கட்டுநோயினைத் தீர்த்தமை மற்றும் அயலிலுள்ளோர் பலரது பிரச்சினைகளை யும் நோய்களையும் தான் கூட்டிவந்த போதும் ஐயா நீக்கிப் பல அற்புதங்களைப் புரிந்துள்ளார் எனவும் கூறினார்.

## கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முதலாவது குருபூசை தினம் 03.07.2009 வெள்ளிக்கிழமை



சைவ உலகிற்கும் தமிழிற்கும் பெரும் பங்காற்றியதோடு மக்கள் சேவையே மகேசன் சேவையே என இவ்வுலகில் வாழ்ந்து, வழி காட்டியதோடும் துர்க்காதேவி தேவஸ்தானத் தின் பெரும் தலைவராகவும் சைவமக்கள் போற்றும் ஆன்மீக அன்னையாகவும் விளங்கிய சிவத் தமிழ்ச்செல்வி, துர்க்கா துரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களினது முதலா வது குருபூசைத் தினம் ஆனிமாத விசாக நன் நாளில் 03.07.2009 வெள்ளிக்கிழமை தேவஸ் தான மண்டபத்தில் திரு ஆறுதிருமுருகன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

04.07.2009 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் அன்னையின் நினைவுப் பேருரை வைபவமும் இடம்பெறவுள்ளது.

உ

# செய்திச் சிதறல்

- சிவலிங்க யோகேந்திரா நிலையத்தினால் திடட்புலம் நரசிங்க வைரவா ஆலயத்தில் சிறட்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியோரை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

- தாவடி ஸ்ரீராம கிருஸ்ண சமிதி அறநெறிப்பாடசாலை மாணவா்களுக்கு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த கொழும்பு இராமகிருஸ்ண மிஷன் தலைவா் ஸ்ரீமத் சர்வ ருபானந்தஜி மகராஜ் பாடசாலை உபகரணப் பொருட்கள் வழங்கியுள்ளாா்.

- அகில இலங்கை திருமுறை மன்றம் நடாத்தும் திருஞான சம்பந்த சுவாமிகள் குருபூசை 09.06.2009 அன்று பற்பல சைவ ஆலயங்களிலும் விசேட நிகழ்வுகளுடன் கொண்டாடப்பட்டது.

- ஈழத்து அறிஞா்களின் வரலாறுகளை எடுத்துக்கூறும், முல்லை அமுதன் தொகுத்து வழங்கும் இலக்கியப்பூக்கள் இரண்டாவது மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. ஈழத்தறிஞா்களின் வரலாறுகளையும் படங்களையும் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

- அகில இலங்கை கலை இலக்கிய சங்கம் நடாத்தும் கவிதைத் தொகுதி நூல் அறிமுக விழா துன்னாலை வடிவேலா் மண்டபத்தில் பொன் சுகந்தன் தலைமையில் 21.06.2009 அன்று இடம்பெற்றது.

- சந்நிதியான் ஆச்சிரமத்தில் 27.06.2009 மாணிக்கவாசகா் குருபூசை இடம்பெறவுள்ளது. அத்துடன் யாழ்ப்பாண புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் அனுசரணையுடன் 10.07.2009 அன்று அருணகிரிநாதா் விழா விசேட நிகழ்வுகளுடன் நடைபெறவுள்ளது.

- யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை மண்டபத்தில் தினமும் காலை 6-7 மணிவரை உடல் உள மேம்பாட்டுக்கான யோகாசனமும் தளா்வுப் பயிற்சியும், துறைசாா் வல்லுனா்களின் கருத்தரங்கும் நடைபெற்று வருகிறது.

பக்குவமாகப் பேசும் தன்மை பல நன்மைகளை உண்டாக்கும்.

உ

(தொடர்ச்சி...

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



இப்பூவுலகில் மானிடப்பிறப்பு எடுத்த அனைவருக்கும் உளரீதியான ஆசாபாசங்களும் அதேபோல உடலியல் தொடர்பான உபாதைகளும் இருப்பது இயல்பானதே. மானிடப்பிறப்பு என்ற வகையில் அருளாளர்களாக வாழ்கின்றவர்களுக்குக்கூட நோய் நொடிகளும் அது தொடர்பான உடலியற் துன்பங்களும் ஏற்படுவது இயல்பானதே. ஆனாலும் அவர்கள் தமது வாழ்க்கைமுறையாலும் ஆன்மீக பலத்தினாலும் இந்த நோய்நொடிகள் மற்றும் உடலியற் துன்பங்களிலிருந்து பெருமளவு விடுபடுகின்றவர்களாகவும் காப்பாற்றப்படுகின்றவர்களாகவும் வாழ்ந்து கொண்டிருப்பதையும் நாம் காணமுடிகிறது.

இந்தவகையில் நோக்கும்பொழுது திரு வேலாயுதம் அவர்கள் ஒரு சராசரி மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்துகொண்டு இருந்தவர். இதனால் அவரது வாழ்க்கைப் பாதையிலும் மகிழ்ச்சிகரமற்ற சில பக்கங்கள் இருக்கத்தான் செய்தன. திரு வேலாயுதம் அவர்கள் தனது துணையைத் தானே தேடிக்கொண்டு மகிழ்ச்சிகரமாகத் தனது குடும்ப வாழ்க்கையை ஆரம்பித்த ஒரு அன்பர். அவருக்கு மூன்று ஆண் மகவுகளும் கிடைத்தன. புலம்பெயர்ந்து சென்ற நாட்டிலும் தனது குடும்பத்துடன் மகிழ்வாக வாழ்ந்து வந்தார்கள். இருந்த போதும் இறுதிக்காலத்தில் அவர் தனது குடும்பத்துடன் நெருக்கமான உறவைக்

*முயற்சி கானல்நீர் அல்ல நிச்சயமாக அது ஆற்றங்கரைக்கே அழைத்துச்செல்லும்.*

கொண்டிருக்கவில்லை என்பதை நாம் உணரமுடிகிறது. ஆனாலும் தனது பிள்ளைகள் மேல் அளவற்ற பாசமும் அவர்களது உயர்வில் அக்கறையுள்ள வராகவும் காணப்பட்டார்கள்.

இதேபோல பிற்காலத்தில் அவரது உடலில் சில நோய்களும் காணப்பட்டன. வெளித்தோற்றத்தில் சுகதேகிபோல் காட்சி அளித்தாலும் நரம்பியல் தொடர்பான சில நோய்களால் அவர் துன்பப்படுவதுண்டு. அத்துடன் அந்த நோய் தொடர்பான வேதனைகளிலிருந்து விடுபடுவதற்காக எப்பொழுதும் மாத்திரைகளைத் தன்வசம் வைத்திருப்பார்கள். இவ்வாறான அவரது வாழ்க்கையின் சில சோகமான பக்கங்களை அவருடன் மிக நெருக்கமாகப் பழகுபவர் கள் மட்டுமே அறிந்திருக்க முடியும்.

மகிழ்ச்சிகரமற்ற இந்தப் பக்கங் களை திரு வேலாயுதம் அவர்கள் யாருடனும் பகிர்ந்துகொண்டதாக நாம் அறியவில்லை. அவர் அவற்றைப் பகிர்ந்து கொள்ள விரும்பியதுமில்லை. அது மட்டுமல்ல அவை தன்னுடனேயே முடிந்து விட வேண்டும் என்றும் தனக்குள் முடிவு செய்துள்ளார் என்பதையும் நாம் உணர முடிகின்றது. மேலும் தன்னால் யாரும் துன்பப்படக்கூடாதெனவும் தான் யாருக்கும் கடமைப்படக்கூடாதென்பதிலும் உறுதியாக இருந்துள்ளார் என்பதை எல்லாம் நாம் அவருடன் பழகும் சந்தர்ப்பங்களில் நன்கு உணரக்கூடியதாகவும் இருந்துள்ளது.

திரு வேலாயுதம் அவர்கள் சிறு வனாக இருக்கும்பொழுது தற்துணிவாக எவ்வாறு முடிவுகளை எடுத்து ஒரு வித்தி யாசமான முறையில் செயற்பட்டாரோ அதே விதமான ஆளுமைப்பண்புகளை அவர் இறுதிவரை கடைப்பிடித்து வந்தது அவ ருடைய ஒரு தனித்துவம் என்று கூறலாம்.

2006ஆம் ஆண்டு வழமைபோல இலண்டனிலிருந்து தாயகம் திரும்பிவந்த வேலாயுதம் அவர்கள் தனது பங்களிப்புடன் இடம்பெற்றுக்கொண்டிருந்த ஆலயத் திருப் பணிகளைப் பார்வையிடல் தொடர்பான வேலைகளில் சிறிது கூடிய காலத்தை செலவுசெய்ய நேரிட்டது. இதனால் அவருடைய விசா முடிவடையும் நிலை ஏற்பட்டதனால் கொழும்பு சென்று இலண் டன் செல்வதற்குரிய விசாக்காலத்தை நீடித் துக் கொண்டு மீண்டும் சந்நிதிக்கே திரும்பி வந்தார்கள்.

இவ்வாறு திரு வேலாயும் அவர்கள் திரும்பிவந்து சந்நிதியில் தங்கிநின்ற காலம் ஆனிஉத்தரப் பொங்கல் நடைபெறுகின்ற காலகட்டமாக இருந்தது. ஆலயத்தில் தங்கியுள்ளவர்களும் இந்தப் பொங்கல் விழாவை ஆவலுடன் எதிர்நோக்கிக் கொண் டிருந்தனர். இதனால் ஆலயச்சூழலும் கல கலப்புடன் காணப்பட்டது. இந்த நிலையில் திரு வேலாயுதம் அவர்களும் ஆலயத்தில் உள்ளவர்களுடன் தானும் ஒருவனாக பொங்கல் விழாபற்றிப் பேசி மகிழ்ந்து கல கலப்புடன் காணப்பட்டார்கள்.

சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் இந்த ஆனிப்பொங்கலும் அது தொடர்பாக ஆலயத்தில் எரியவிடப்படும் கடல்நீர் விளக்கும் தனித்துவமான சிறப்புப் பொருந் தியவை. ஆனி மாதத்தில் அமாவாசை யைத் தொடர்ந்துவரும் திங்கட்கிழமை இரவு கடலுக்குச் சென்று அங்கே உப்புத் தண்ணீர்த்தீர்த்தம் எடுக்கப்படும். ஆறும் கடலும் சந்திக்கும் சங்கமத்தில் இந்த "உப்புத்தண்ணீர்த் தீர்த்தம்" எடுக்கப்படுவது ஒரு தனிச்சிறப்பாகும். குறிப்பிட்ட இந்தத் திங்கட்கிழமை ஆலய வீதியையும் ஆல யத்திலிருந்து உப்புத்தண்ணீர்த் தீர்த்தம் எடுக்கப்போகும் தெருக்களையும் மக்கள்

கூட்டித் துப்புரவாக்கி தண்ணீர் தெளித்து சுத்தமாக வைத்திருப்பார்கள்.

நடுச்சாமம் பிரதம பூசகரும் ஏனைய பூசகர்களும் அத்துடன் ஆலயத்துடன் நெருக்கமான தொடர்புள்ளவர்கள் மற்றும் பூக்காரர் போன்றவர்களும் சங்கு, சேமக் கலம் என்பவை ஒலிக்க சின்னக் கடற் கரைப் பகுதியைச் சென்றடைவார்கள். அங்கே கரையிலிருந்து கணிசமான தூரம் கடலுக்குள் பிரதம பூசகரும் ஏனையவர் களும் நடந்துசென்று, கொண்டு சென்ற குடத்தில் உப்புத்தண்ணீர்த் தீர்த்தத்தை எடுத்து வருவார்கள். அவ்வாறு எடுத்து வந்த தீர்த்தத்தை ஆலயத்தில் மண்பானை யில் திரும்ப ஊற்றி, அதனுள் நன்கு நெய்யில் ஊறவைத்த திரியினை இட்டு விளக்காக எரியவிடுவார்கள்.

இந்த விளக்கு ஒரு அற்புதமான விளக்காகும். நன்றாக நெய்யினுள் ஊறவைத்த இந்நீண்ட திரியின் ஒரு பகுதி யினை மட்டுமே திரியாக எரிய விடுவார் கள். மிகுதிப் பகுதியினை மண்குடத்தில் உள்ள உப்புத்தண்ணீர்த் தீர்த்தத்திற்குள் மிதக்கவிட்டுப் பானைக்கு வெளியே தொங்கவிடுவார்கள். இங்கே திரி தொடர்ச்சி யாக எரியும்பொழுது மண்குடத்தில் உள்ள உப்புத்தண்ணீர் சிறிது சிறிதாக வற்றிச்செல்லும். அதற்கு மீண்டும் எடுத்து வந்த மிகுதி உப்புத்தண்ணீர்த் தீர்த்தத்தை விட்டு நிரப்புவார்கள். ஆம் எண்ணெயில் திரிவிட்டு எரித்தால் எண்ணெய் வற்றுவது போல இங்கே உப்புத்தண்ணீர் தானே வற்றிச் செல்லும்.

அதனைத் தொடர்ந்து அங்கே ஒரு விஷேட பூசையும் சிறப்பாக நடாத்தப்படும். அத்தினத்திலிருந்து வேலவனுக்கு ஒவ் வொரு நாளும் நைவேத்தியமாக மாம் பழம் வைக்கப்படுவது வழக்கமாக உள் ளது. அத்துடன் கண்ணகை அம்மன் புராணப் படிப்பும் இடம்பெறும். அது ஆனிப் பொங்கலுக்கான ஆரம்பச் செயற்பாடாகும்.

இவ்வாறு உப்புத்தண்ணீர்த் தீர்த் தத்தில் எரியவிட்ட திரி அடுத்த திங்கட் கிழமை இரவு பொங்கல் நடைபெறும் ஒரு வாரகாலம் வரை எரிந்துகொண்டே இருப் பது அற்புதமான காட்சியாக இருக்கும். பொங்கல் நடைபெறுகின்ற அந்தத் திங்கட் கிழமை மாலையிலிருந்தே ஆலயம் மங்கள கரமான சூழலாகக் காட்சியளிக்கத் தொடங்கிவிடும். ஆலயத்தின் பிரதான வாச லில் வெளிவீதி முழுவதும் பொங்கலுக் குரிய ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கும். அன்று ஆலயத்தின் பூசகர்களின் உபயமாக பிரதானமானதும் பிரமாண்ட மானதுமான பொங்கற் செயற்பாடும் அங்கே ஆலய வாசலில் இடம்பெறும். பின்னிரவு நேரம் நடைபெறுகின்ற இந்தக் காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். நேர்த்திக் குப் பொங்குபவர்கள், வருடாவருடம் பொங்குபவர்கள் என அதிக மானவர்கள் மிகவும் பக்திப்பெருக்குடன் மிக அருகருகே பொங்கற் பானைகளை வைத்து பக்தி பூர்வமாக பொங்கலில் ஈடுபடுவார்கள். இவ்வாறு பின்னிரவு நேரம் அங்கே பொங் கற்செயற்பாடு நடைபெற்று இறுதியாக எட்டுத் திக்கிலும் படையற் செயற்பாடும் இடம்பெறும்.

பொங்கல் நடைபெறுகின்ற புனிதம் நிறைந்த அந்தநேரம் அனைவரும் பக்திச் சூழலில் மிகவும் கலகலப்புடன் காணப்படு வார்கள். இத்தகைய ஒரு சூழ்நிலையில்த் தான் 2006ஆம் ஆண்டு திரு வேலாயுதம் அவர்களும் சந்நிதியானின் அந்த ஆனி மாதப் பொங்கலில் தானும் ஒருவராகக் கலந்துகொண்டு அந்தப் புனிதமான பக்தி அனுபவத்துக்கும் ஆளானார்கள். ஆலயமே

தஞ்சமென அங்கே தங்கி இருக்கின்ற பல அடியார்களுடன் தானும் ஒருவராக ஒன்றாகச் சேர்ந்தே திரு வேலாயுதம் அவர்கள் இந்தப் பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் ஆலயமே தஞ்சம் என தங்கியிருக்கின்ற அன்புள்ளங்களில் பரிமளம், ராஜேஸ் போன்ற ஒருசில பாத்திரப் படைப்புக்கள் பற்றியேனும் நாம் சிறிது வெளிப்படுத்துவது பொருத்தமானது. பரிமளத்திற்கு வயது 65க்கு மேல் இருக்கும். நிறம் கறுப்பு, மெல்லிய உடலும் சிறிது உயரமான தோற்றமும் உள்ளவர். ஆலயமே தஞ்சமென தங்கியிருந்தாலும் ஆலயச் சூழலைக் கூட்டிப் பெருக்கி சரியைத் தொண்டில் ஈடுபட்டுக்கொண்டிருப்பார். அத்துடன் ஆலய பூசகர்கள் கேட்கின்ற சந்தர்ப்பங்களில் அவர்களின் வேண்டுகோளை ஏற்று பலவிதமான ஆலயத் தொண்டுகளையும் செய்பவர். நிதானமான பேச்சையும் நேர்மையான செயற்பாட்டையும் நாம் எப்பொழுதும் அவரிடம் காணமுடியும்.

ராஜேஸ் என எல்லோராலும் அழைக்கப்படுபவர் நடுத்தர வயதுள்ளவர். பொது நிறம் மிகவும் மெலிந்த தோற்றம் உள்ளவர். ஆலயத்தின் உள்வீதியை எப்பொழுதும் கூட்டிப் பெருக்கி சுத்தமாக வைத்திருப்பார். எழும்பி நடந்தால் எங்கேயோ போய் விழுந்துவிடுவதைப்போல தடுமாற்றமும் சிறிது வேகமாகவும் நடப்பார். ஆனால் விழமாட்டார். பார்ப்பவர்களுக்கு இயல்பாகவே ஒரு இரக்கம் ஏற்படும்படியான உடல்தோற்றமும் முகத்தோற்றமும் உள்ளவர். அதேநேரம் ஆலயத்தில் காணப்படுகின்ற பல நாய்கள்மீது இவர் எப்பொழுதும் இரக்கம் காட்டுவார். தனக்குக் கிடைக்கும் உணவினை அந்த நாய்களுக்கும் பகிர்ந்தளித்தே தானும் உண்ணுவார்.

மேற்படி பரிமளம், ராஜேஸ் ஆகிய இருவரும் யாரிடமும் எதையும் யாசிக்க மாட்டார்கள். அதேநேரம் யாரும் ஏதாவது கொடுத்தால் மட்டும் பெற்றுக்கொள்வார்கள். இதேபோல் நீண்ட சடை வளர்த்து நீண்ட காலமாக ஆலயத்தில் தங்கியிருக்கின்ற சடைச்சாமியார், மனதை ஒருநிலைப்படுத்தி நீண்டநேரம் பூவரசு மரத்தின்கீழ் நிஷ்டையிலிருக்கும் கந்தபுராணப் படிப்பு படிப்பவரான விநாசித்தம்பிச் சாமியார் போன்ற எல்லோரும் திரு வேலாயுதம் அவர்களின் விருப்பத்திற்குரிய பாத்திரப் படைப்புக்களாகும்.

இவ்வாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வாழ்ந்துவருகின்ற மேற்படி அன்பர்களைப்போன்ற ஆலயச்சூழலில் வாழ்ந்து வருகின்ற ஒவ்வொருவரது வாழ்க்கைக் கோலங்கள் பற்றியும் திரு வேலாயுதம் அவர்கள் நன்கு அறிந்து வைத்திருந்தார்கள். அத்துடன் அவர்களை ஒரு குடும்பமாக நோக்கியதுடன் தானும் அதில் ஒருவர் போலவே அவர் பிற்காலத்தில் செயற்பட்டு வந்ததையும் நாம் காண முடிந்தது.

பரிமளம், ராஜேஸ் போன்றவர்களுடன் மிகவும் நகைச்சுவையுடன் உரையாடி அவர்களைக் கலகலப்பாக்குவதுடன் தானும் கலகலப்பாகக் காணப்படுவார். இதேபோன்று அருளாளர் விநாசித்தம்பி சாமியாரைப்போன்று தானும் பூவரசு மரத்தின்கீழ் மனதை ஒருநிலைப்படுத்தி நிஷ்டையிலிருக்க முயற்சித்து அது முடியாதுபோன அனுபவத்தையும் திரு வேலாயுதம் அவர்கள் அடியேனுடன் பகிர்ந்துகொண்டதுமுண்டு. "நான் கண்களை மூடி நிஷ்டை செய்தால் எனது சிந்தனை சாதாரண நேரத்தில் இருப்பதை விட இன்னும் வேகமாக அல்லவா குரங்கு தாவுவதைப்போன்று அங்கேயும் இங்கேயும்

போய்க்கொண்டிருக்கிறது. ஆனால் விநாசித்தம்பி ஐயா இவ்வளவு நீண்டநேரம் தனது மனதை எப்படி ஒருநிலைப்படுத்தி, கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார். இவர்கள் எல்லாம் உண்மையில் பக்குவப்பட்டவர்கள் தான்" என்றும் அந்த அருளாளர்களின் ஆற்றலைத் திரு வேலாயுதம் அவர்கள் வியந்து பாராட்டுவார்கள்.

2006ஆம் ஆண்டு இவ்வாறான உணர்வலைகளுடன் சந்நிதி ஆலயச் சூழலில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற கால கட்டத்தில்தான் திரு வேலாயுதம் அவர்கள் அந்த விநோதமான முடிவை தனது மனதிற்குள் திடமாக எடுத்திருந்தார்கள். அந்த விநோதமான முடிவை நிறைவேற்று வதற்கு ஒருசில நாட்கள் மட்டும் இருந்த நிலையில் அவருடைய செயற்பாடுகள் எவ்வாறு அமைந்திருப்பது என்பதையும் அவர் மேற்கொண்ட அந்த விநோதமான முடிவினையும் அடுத்த இதழில் அடியார் களிற்கு வெளிப்படுத்துகின்றோம்.

(தொடரும்...

## தினையளவு புண்ணியம் மலையளவு பலன்

காவிரிக் கரையில் சிவலிங்கத்தின்மீது காய்ந்த சருகுகள் வீழ்வதைக் கண்டு, எச்சில் நூலால் ஒரு சிலந்தி பந்தர் இட்டது. இந்தச் சிவபுண்ணியத்தால் சிலந்தி மறுபிறப்பில் சோழநாட்டில் கோச்செங்கட் சோழனாகப் பிறந்து தமிழகத்தை ஒரு குடையின்கீழ் ஆட்சி புரிந்தது. சிவபெருமானுக்கு 70 சிவாலயங்களும் திருமாலுக்கு 3 திருக்கோயில்களும் கட்டி வழிபாடு செய்து சிவபதம் பெற்றது.

வேதாரண்யத்தில் அணைகிற நெய் விளக்கைத் தீண்டிய சிவபுண்ணியத்தால் எலி, பலிச் சக்கரவர்த்தியாகப் பிறந்தது. பலிச் சக்கரவர்த்தியின் பெருமை அளவிட முடியாது.

ஆதலால் அணுத்துணையும் பாவம் செய்யாது சிவபுண்ணியம் செய்து நலமடைவோமாக.

நாம் இப்போது நுகர்கின்ற இன்ப துன்பங்களுக்கு முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளே காரணமாகும். அவரவர் செய்த வினை ஊழாக மாறி உருத்து வந்து ஊட்டும்.

நம் உடம்பின் நிழல் நாம் நடந்தால் நம்மைத் தொடர்ந்து வருவதைப்போல நாம் செய்த வினையும் நம்மைத் தொடர்ந்து வரும்.

இறைவன் நடுநிலை தவறாதவன்; பாரபட்சமில்லாதவன். நாம் செய்த வினை நல்வினை தீவினைகளுக்கு ஏற்பச் சுக துக்கங்களை வகுத்து விதிக்கிறான். இறைவனுடைய அருளாணையால் விதிக்கப்பட்டது விதி எனப்படுகிறது. விதியை வென்றவர் எவரும் இலர். விதி வழி மதி செல்லும்.

நாட்டையும், நகரத்தையும், பொன்னையும், மணியையும், விலையுயர்ந்த உடைகளையும் தூசாக எண்ணித் துறந்து உடுத்த உடையுடன் கானகம் சென்ற குணவதியாகிய சீதாதேவி ஒரு மானை விரும்பினாள். கணவனுக்குக் கட்டளையிடாத அந்தக் கற்புக்கரசி கணவனைப் பார்த்து "இந்த மானைப் பிடித்துக்கொடும்" என்று ஏவினாள். இதற்குக் காரணம் விதிதான். விதியின் வலிமையை யார் வெல்ல முடியும்.

இறைவனின் பெருமையை அறிந்தவர்கள் மற்ற எதையும் விரும்பமாட்டார்கள்.

தமிழகத் திருக்கோயில் வரிசை: உ

# திருவாலங்காடு

## வல்லையூர் அப்பாண்ணா அவர்கள்

தமிழகத்தில் மிகவும் சிறப்பு உடையது தொண்டை மண்டலம். "சோழ நாடு சோறுடைத்து; பாண்டிநாடு முத்து உடைத்து; தொண்டைநாடு சான்றோர் உடைத்து" என்பது முதுமொழி. ஆல மரக்காடாக இருந்த இவ்விடத்தில் இறைவன் வெளிப்பட்டு நடனம் செய்தமையினால் "ஆலங்காடு" எனப் பெயர்பெறக் காரணமாயிற்று. தொண்டை மண்டலத்தில் பாடல்பெற்ற 32 திருக்கோயில்களில் தனிச் சிறப்புடையது ஆலங்காடு. இச்சிறப்புக்கு இரண்டு காரணங்கள் உண்டு.

1. காளியின் பொருட்டு இடது திருவடியை (குஞ்சித பாதத்தை) அண்டமுறத் தூக்கி அருட்கூத்து நிகழ்த்தியமை.
2. தலையால் நடந்து வீதியை வலம்வந்த காரைக்கால் அம்மையார் பாடிக் கொண்டேயிருக்க, எம்பெருமான் இன்றும் ஆடிக்கொண்டேயிருப்பது.

நடராஜப்பெருமான் அருட்கூத்தியற்றும் சபைகள் ❖ஐந்தினுள் முதன்மையாக விளங்குவது திருவாலங்காடு.

சென்னையிலிருந்து திருத்தணி செல்லும் பேருந்துகளிலும், திருவள்ளூர் வழியாக அரக்கோணம் செல்லும் பேருந்துகளிலும், காஞ்சிபுரம்- திருவண்ணாமலை- அரக்கோணம் முதலான பெரு நகரங்களிலிருந்தும் சிறப்பான பேருந்து வசதிகள் உண்டு.

பரமனை நடனப்போட்டிக்கு அழைத்த காளியின் செருக்கை அடக்க எண்ணினான் ஆடல் வல்லான். இறைவன் ஆடிய நடன முத்திரைகளுக்கு ஏற்றபடி காளியும் ஆடிக்கொணடேயிருந்தாள். இறுதியில், இறைவன் தனது இடது காதில் இருந்த மாணிக்கக் குண்டலத்தை கீழே விழச்செய்து, அதனை இடது காற்பெருவிரலால் எடுத்து, தன் காதில் பொருத்திக்கொண்டு ஊர்த்துவ தாண்டவம் ஆடினார். இதனை ஆட முடியாமல் காளி தோற்று மயக்கமுற்றாள். நடனத்தில் தோற்றுப்போன உருத்திரகாளியின் தனிக்கோயில் வெளிவீதியில் தென்கிழக்கு மூலையில் குளத்தருகே காணப்படுகிறது. "நம்மை வழிபட வருபவர்கள் உன்னை முதலில் வழிபட்டுப் பின்னர் நம்மை வழிபாடு செய்தாற்றான் பூரண நன்மை பெறுவர்" எனக் காளிக்கு அனுக்கிரகம் புரிந்தான் பரமன். இந்த நடைமுறை இன்றும் தொடர்கிறது. விபரம் தெரியாமல் கோயில் முகப்பினுள் நுழைந்த எம்மை, ஒரு முதியவர் தடுத்து நிறுத்தி, "காளியை வணங்கி விட்டு இங்கே வாருங்கள்" என வழியும் காட்டிவிட்ட அனுபவம் நமக்கு உண்டு.

கயிலாயம் காணும் ஆவலில் காரைக்கால் அம்மையார் தலையால் நடந்து செல்கிறார். ஆடிஆடி வரும் விநோத வடிவம் யாரென்று உமையவள் வினாவுகிறாள். "எம்மைப் பேணும் அம்மை காண்" என இறைவன் பதில் கூறுகிறான். ஆதியும் அந்தமும் இல்லாத இறையனாரால் "அம்மையே" என்றழைக்கப்பட்ட

காரைக்கால் அம்மையார் ஆண்டவனிடம் ஆடற் காட்சி வேண்டி நின்றார். ஆடற் காட்சியினை ஆலங்காட்டினில் காண்பிப்ப தாக வாக்களிக்கிறான் பரமன். "....... பிற வாமை வேண்டும். பிறப்புண்டேல் உன்னை மறவாமை வேண்டும். நான் மகிழ்ந்துபாட, அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க" என்று வரம்வேண்டி அங் ஙனமே திருவாலங்காட்டுக்குத் தலையால் நடந்தே செல்கிறார். அண்டமுற நிமிர்ந் தாடும் அமலன் சேவடிக்கீழ் இன்றும் இருக் கின்ற காரைக்கால் அம்மையாரால் புகழ் பூத்த திருப்பதி திருவாலங்காடு. இங்கு அவர் பாடியதே "மூத்த திருப்பதிகம்" ஆகும்.

திருப்பாச்சூர் தரிசனம் முடிந்து வந்த திருஞானசம்பந்தர், காரைக்கால் அம்மையார் தலையால் நடந்த திருத்தல வீதியை மிதிக்க அஞ்சி சற்று தூரத்தே உள்ள "பழையனூர்" கிராமத்தில் தங்கி இருந்தார். நள்ளிரவில் இறைவன் துயிலெழுப்பி "என்ன சம்பந்தா! என்னைப் பார்க்க மறந்தனையோ? பாடவும் மறந் தனையோ" என்று கேட்க, "துஞ்ச வரு வாரும்..." என்கிற பதிகம் பிறக்கிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தூரத்தே இருந்தபடியே, "ஆத்தா..... ஆலங்காடா..... உன் அடியார்க்கடியேன் ஆவேனே" என்று பாடிப் பரவினார். காளியுடன் ஆடிய திருநடனத்தைக் குறிப்பிட்டு, "ஆடினார் காளி காண ஆலங்காட்டு அடிகளாரே" என்கிறார் அப்பர் பெருமான். தேவார மும் மூர்த்திகளை விட கச்சியப்பச் சிவாச்சாரி யார், இராமலிங்க சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் போன்ற அருளாளர்களும் ஆலங்காட்டு அப்பனைப் பாடியுள்ளனர்.

கோயிலின் முகப்பு வாசலின் மேற்பகுதியில் வரசித்தி விநாயகர், ஊர்த் துவ தாண்டவர், ரிஷபாருடர், முருகன், காளி என சுதைச் சிற்பங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. உள்ளே நடந்தால் கிழக்கு நோக்கிய ஐந்து நிலைகள் கொண்ட இராஜகோபுரம். கோபுரத்தைத் தாண்டியதும் பழைய நூற்றுக்கால் மண்டபம் ஒன்று கண்ணிற்படுகிறது. தேவஸ்தானத்தின் சித்த மருத்துவ சாலையாக தற்போது இம்மண்டபம் விளங்குகிறது. கோபுர வாசலில் வல்லவ கணபதி (துதிக்கையுடன் சேர்த்து) பதினொரு கரங்களுடன் காட்சி தருகிறார். மறுபக்கம் வள்ளி, தெய்வயானை சகிதம் முருகன். உள்ளே கொடிமரம்- பலிபீடம்- நந்தி ஆகியவை காணப்படுகின்றன. அடுத்து வரும் மூன்று நிலைகள் கொண்ட உட்கோபுரத்தில், காரைக்கால் அம்மையார் வரலாறு உட்பட பல சுதைச்சிற்பங்கள் காணப்படுகின்றன.

இரத்தினசபை அழகுவாய்ந்தது. அண்டமுற நிமிர்ந்தாடும் பெருமான் இங்கே "ரத்தினசபாபதி" எனப் பெயர் பெறுகிறார். அழகிய பஞ்சலோகத் திருமேனி. தலை வரையில் காலைத் தூக்கிய இடது காலு டன் தாண்டவக் கோலத்தில் இறைவன். இறைவனின் ஐந்தொழில்களில் ஒன்றான அருளலுக்கு உரிய நடனம் இது. தூக்கிய பாதம் வீட்டுப்பேற்றை அருளுவது.

ஊர்த்துவ தாண்டவருக்கு இடது புறம், "சமசீனாம்பிகை" என்னும் திருப் பெயருடன் சற்றே வித்தியாசமான முறை யில் அம்பிகை நின்ற கோலத்தில் உள் ளார். பொதுவாக நடராஜருக்கு அருகே சிவகாமி அம்மை தமது இடதுகரத்தை தொங்கவிட்டபடி இருப்பதையே பார்த்திருப் பீர்கள். இங்கே வலது கரத்தை தொங்க நடனத்தின் அழகு கண்டு) ஆச்சரியமான பார்வையுடன் அம்பிகை உள்ளார்.

உட்பிரகாரத்தினுள் பல சந்நிதி களையும் கடந்து மூலவரைத் தரிசிக்க உள்ளே போகிறோம். கருவறை நல்ல கற்கட்டமைப்புடையது. மூலவர் அழகிய சிவலிங்கத் திருமேனி. "ஆலங்காட்டு அப்பரை"க் கண்குளிரக்கண்டு வணங்கு கிறோம். கருவறைச் சுவரின் வெளிப்பக்கம் விநாயகர், தெட்சணாமூர்த்தி, இலிங்கோற் பவர், பிரமன், துர்க்கை ஆகியோர் உள்ளனர்.

மூலவரைத் தரிசித்த மன நிறை வுடன் வெளியே இரண்டாம் பிரகாரத்துக்கு வருகிறோம். தெற்கு நோக்கிய சந்நிதி சிறியதாக இருந்தபோதிலும் தூண்களில் உள்ள சிற்பங்கள் கலையழகுடன் மிளிர் கின்றன. அம்பாள் "வண்டார் குழலியம்மை" நின்ற திருக்கோலத்தில் அருள்பாலிக்கிறாள். அம்பாள் சந்நிதியில் வேறு மூர்த்தங்கள் எதுவுமில்லை.

ரத்தினசபாபதியை, ஆலங்காட்டு அப்பரை, வண்டார் குழலியம்மையை மீண்டும் மீண்டும் வணங்கிக்கொண்டே வெளியே வருகிறோம். "உன்னை மற வாமை வேண்டும்...." என்று காரைக்கால் அம்மையார் கேட்டது மீண்டும் நினைவில் வருகிறது. காரைக்கால் அம்மையார் கனிந்துபாட பரமனார் பாதம் தூக்கி ஆடும் பரமானந்த பரவசத்துடன் நாமும் ஆலங் காட்டிலிருந்து விடைபெறுகிறோம்.

"முத்தாமுத்தி தரவல்ல முகிழ்மென்முலையாள் உமைபங்கா
சித்தாசித்தித் திறங்காட்டுஞ் சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும்பரமா பழையனூர்மேய
அத்தா ஆலங்காடா உன்அடியார்க்கு அடியேன் ஆவேனே"

-சுந்தரர்-

### *பஞ்ச சபைகள்

(சிவபெருமான் அருட்கூத்தியற்றும் சபைகள் ஐந்து)

1. இரத்தினசபை- திருவாலங்காடு (ஊர்த்துவ தாண்டவம்)
2. கனகசபை- பொன்னம்பலம் - சிதம்பரம் (ஆனந்த தாண்டவம்)
3. வெள்ளியம்பலம்- மதுரை (சந்தியா தாண்டவம்)
4. தாமிர சபை- திருநெல்வேலி (முனி தாண்டவம்)
5. சித்திர சபை- திருக்குற்றாலம் (திரிபுர தாண்டவம்)

### ஞானச்சுடர் கட்டுரையாளருக்கு அன்பான வேண்டுகோள்

ஞானச்சுடர் மலருக்கு தொடர்ந்தும் ஆக்கங்களை வழங்கும் தங்களுடைய பணி மென்மேலும் சிறக்க வாழ்த்துவதோடு, தங்களின் ஆக்கங்கள் புதிய சிந்தனைகளுடனும், ஆன்மீக விழுமியங்களுடனும், சமூக மேம்பாட்டினை மேம்படுத்தும் வகையில் தங்களின் புதுவிதக் கருத்துக்களை நாங்களும் வாசகர்களும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். இந்தக் கருத்துக்கு ஏற்றவகையில் ஆக்கங்களைத் தெளிவான எழுத்துவடிவில் வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

-மலர்க்குழு-

வாழ்க்கை அனுபவம் இல்லாத எவரும் கல்வி கற்றவராக முடியாது.

உ

# ஆடிமாத வாராந்த நிகழ்வுகள்

03-07-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு:- "ஆறுமுகமும் அலங்காரமும்"

வழங்குபவர்:- திரு க. பாலசுப்பிரமணியம் அவர்கள்

[வலி. மேற்கு பிரதேசசபை நிர்வாக உத்தியோகத்தர்]

---

10-07-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

பாடசாலை மாணவர்கள் நிகழ்வு

யா /தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்

---

17-07-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம்:- "பஜனை"

வழங்குபவர்:- வில்லிசைக் கலைஞர் க. சத்தியதாஸ் அவர்கள்

---

24-07-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு:- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர்:- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

---

31-07-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**ஞானச்சுடர் 139ஆவது மாத வெளியீடு**

**ஆடி - 2009**

வெளியீட்டுரை:- செல்வி க. சசிலேகா அவர்கள்

[சைவப்புலவர்]

மதிப்பீட்டுரை:- திருமதி கௌரி சுரேசன் அவர்கள்

[விரிவுரையாளர், ஆசிரியக் கலாசாலை]

பதிவு இல. Q.D/38/NEWS/2009

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம் 2009

